Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 070 | வியாழக்கிழமை | தை 22 ஆம் நாள் 04 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## இலங்கைக்கு சுதந்திரதினம்

தமிழ்மொழி புறக்கணிப்பு

கொழும்பு, பெப். 4
இலங்கையின் 73 ஆவது சுதந்திரதினம் இன்று 19

## இலங்கையுடன் வர்த்தகம் வேண்டாம்

பிரிட்டனுக்கு அழுத்தம்

லண்டன், பெப். 4
இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளும் நாடுகளுடன் பிரிட்டன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்வதை நிறுத்தும் வர்த்தக சட்டத் திருத்தங்களை ஆதரிக்குமாறு, இனப்படுகொலையைத் 19



## முஸ்லிம்களும் பேராதரவு!

அம்பாறை, பெப். 4
பொத்துவில் முதல் பொலிகண்டி வரை பேரணி நேற்று அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பமாகியது. இதற்கு முஸ்லிம்கள் தமது பேராதரவை வழங்கி 19

### பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை

# தடைகளைத் தகர்த்து முன்னேறுகிறது பேரணி!

யாழ்ப்பாணம், பெப்ரவரி 4
சிறுபான்மை மக்களின் வாழ்வுரிமையையும் அரசியல் உரிமைகளையும் வலியுறுத்தி நேற்று ஆரம்பமான 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான' பேரணி கொட்டும் மழைக்குள்ளும், பொலிஸாரின் தடைகளைத் தகர்த்து பேரெழுச்சி பெற்றது. 19

## வீட்டை உடைத்து 41 பவுண் 'அபேஸ்'

யாழ்ப்பாணம், பெப். 4
யாழ்ப்பாணம் ஆறுகால் மடம் பழம் வீதியில் உள்ள வீடுடைத்து 41 பவுண் தங்க நகைகள் நேற்றுத் திருடப்பட்டுள்ளன.
இந்தத் திருட்டு இடம் பெற்று வெறும் மூன்றே மணிநேரத்தில் சந்தேக நபரை 19

## பேரணிக்கு தடை போடுவதாயின் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்குக!

மல்லாகம் நீதிமன்றம் அதிரடி

யாழ்ப்பாணம், பெப். 4
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தைத் தடைசெய்ய வேண்டுமாயின் சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது மிகவும் அவசியம் 19

யாழ். நீதிமன்ற எல்லைக்குள்

## நான்கு நாள்களுக்கு போராட்டங்கள் தடை

யாழ்ப்பாணம், பெப். 4
யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் நேற்று முதல் நான்கு நாள்களுக்கு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்துவதற்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் நேற்றுப் புதன்கிழமை தாக்கல்செய்த விண் 19

## தாழங்குடாவிலிருந்து முல்லைத்தீவு வரை!

பேரணி இன்று தொடரும்

மட்டக்களப்பு, பெப். 4
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரெழுச்சிப் பேரணி இன்று தாழங்குடாவில் இருந்து முல்லைத்தீவு வரை செல்லவுள்ளது.
தாழங்குடாவில் இன்று காலை ஆரம்பமாகும் இந் 19




## சுகாதாரப் பணியாளர் விபத்தில் உயிரிழப்பு

*மன்னார் அடம்பனில் சம்பவம்*

மன்னார், பெப். 4
மன்னாரின் அடம்பன் பகுதியில் நேற்று முற்பகல் 11.45 அளவில் இடம்பெற்ற 19

## இளம் குடும்பப் பெண் தூக்கில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 4
யாழ்ப்பாணம் அளவெட்டிப் பகுதியில் இளம் குடும்பப் பெண்ணொருவர் தூக் 19

## எல்லை மீறிவிட்டார் ஐ.நா. ஆணையாளர் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமும் இல்லை

அறிக்கையை நிராகரிக்க இலங்கை முடிவு

கொழும்பு, பெப். 4
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், தனக்குரிய விடயப்பரப்புக்கு அப்பால்சென்றே இலங்கை தொடர்பான அறிக்கையைத் தயாரித்துள்ளார். முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்களோ, மூலங்களோ இல்லை என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்மாநாட்டில், ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிவிதுரு 19

## ஐ.நா. அறிக்கையாளர்களுக்கு போராட்டம் தொடர்பில் கடிதம்

மட்டக்களப்பு, பெப். 4
தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக இடம்பெறும் 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி' வரையான பேரணி குறித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 20


## மட்டுவிலில் சாரதி சடலமாக மீட்பு

சாவகச்சேரி, பெப். 4
முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் கோவில் மடத்தினுள் தூக்கில் தொங்கிய 20



இலங்கை அரசின் தமிழின அழிப்புக்கு எதிராகவும் அரசின் தமிழ் மக்கள் மீதான அராஜகங்களைக் கண்டித்தும் நேற்று ஆரம்பித்த, 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி' வரையான பேரணியின் காட்சிகள்...
(படங்கள்: நன்றி குமணன்)










# சுதந்திர தினமா? வெசாக் தினமா?

## ருவிற்றரில் எழுந்த சந்தேகம்

கொழும்பு, பெப். 4
பிரிட்டன் காலனித்துவத்தின் கீழிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற 73 ஆவது வருட தினத்தைக் கொண்டாடுவதற்கு இலங்கை அரச தரப்பினர் ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிலையில், ருவிற்றர் சமூக வலைத்தளத்தில் 'நாளையதினம் கொண்டாடப்படுவது சுதந்திர தினமா ? அன்றேல் வெசாக் தினமா?' என்ற கேள்விக்கணைகளுடனான பதிவுகளை நேற்றுக் காணமுடிந்தது.

இதற்கு காரணமாக அமைந்தது சமூக செயற்பாட்டாளர் மரிஸா டி சில்வா ருவிற்றரில் நேற்று இட்ட பதிவாகும்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கப்பகுதி அலங்கரிக்கப்பட்டுள்ள விதத்தை அவர் படங்களுடன் பதிவிட்டிருந்தார். பௌத்த கொடிகளால் நிறைந்து அந்தப்பகுதி காணப்படுகின்றதைப் படங்கள் புலப்படுத்தின.

இதனையடுத்து அவரது ருவிற்றரின் கீழ் பதிவிட்டவர்களில் சிலர் இது சுதந்திர தின விழாவா? அன்றேல் வெசாக் தின விழாவா? என்று பலரும் கேள்வி எழுப்பி கேலியாகப் பதிவுகளை இட்டிருந்தனர். நேற்றையதினம் பிரித் பௌத்த சடங்கு நடைபெற்றது என தாம் கேள்விப்படுகிறேன் எனவும் இதனை வருடாந்த பிரித் நிகழ்வு என சிலர் கூறுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு முன்னர் தாம் அறிந்த வரையில் சுதந்திர சதுக்கம் இவ்வாறாக பௌத்த கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் மரிஸா தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களத்தில் மாத்திரமே தேசிய கீதம் இசைக்கப்படும் என ஏற்கனவே அரசு அறிவித்துள்ள நிலையில், சுதந்திர சதுக்கத்தை முற்றுமுழுதாக பௌத்த கொடிகளால் அலங்கரித்துள்ளமையானது அரசின் இனவாத முகத்தை அப்பட்டமாகத் துகிலுரித்துக்காட்டுகின்றது என்று அவர் தனது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த அரசின் அப்பட்டமான தோல்வியை திசைதிருப்புவதற்கான செயற்பாடே இது என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். (தஇ)

# 'பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை' கவனவீர்ப்புக்கு யாழ். முஸ்லிம்கள் ஆதரவு

யாழ்ப்பாணம், பெப். 4
சிவில் சமூக அமைப்புக்களின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு மாகாணம் தழுவியதாக ஆரம்பித்துள்ள 'பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை' கவனவீர்ப்புப் பேரணிக்கு யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி யாழ். முஸ்லிம் இளைஞர் கழகம் விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாட்டில் சிறுபான்மை இன மக்களுக்கு இழைக்கப் பட்டுவரும் அநீதிகளுக்கு எதிராக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் ஒன்றுதிரண்டு தமது பலத்தை நிரூபிக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒன்றிணைவே சிறுபான்மை இனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அநீதிகளை எதிர்கொள்ள உறுதுணையாக அமையும்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் நில அபகரிப்பு, உரிமை மறுப்பு போன்ற சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கவனவீர்ப்புப் பேரணியில் சகோதர உறவுகளாக 'மக்கள்' என்ற நோக்கில் முஸ்லிம் மக்களாகிய நாமும் பங்கெடுத்துக் கொள்ள விரும்புகின்றோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் 'தமிழ் பேசும் மக்களாக' ஒன்றித்து வாழ்வதே இரு சமூகங்களுக்கு மத்தியில் பலத்த பாதுகாப்பாக அமையும் என்பது நாம் நீண்டகாலமாக வலியுறுத்திவரும் உண்மை.

அந்தவகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களாக அனைத்து வழிகளிலும் ஒன்றிணைய முயற்சிப்போம் என்று இத்தால் பகிரங்க அழைப்பு விடுக்கின்றோம். இந்தப் பேரணியையும் தமிழ் பேசும் மக்களாக இணைந்து வெற்றிகரமாக முன்னெடுப்போம் இந்த நடவடிக்கைக்கு முஸ்லிம் மக்கள் சார்பில் யாழ் முஸ்லிம் இளைஞர் கழகமாக நாமும் எமது ஒத்துழைப்புக்களை வழங்குகின்றோம். - என்றுள்ளது.
(தஇ)

# பூநகரி தெளிகரையில் வற்றாத மழை வெள்ளம்

## தீர்வைப் பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, பெப்.4

**கிளிநொச்சி - பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெளிகரைப் பகுதியில் புதிதாக குடியேற்றப்பட்ட மக்கள் மழை காலம் முடிவடைந்தும் வெள்ளத்திலிருந்து மீள முடியாத நிலையில் வாழ்கின்றனர். இந்த மக்கள் வருடம் தோறும் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கின்றனர்.**



மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இந்தக் குடியிருப்புக்கள் அமைந்துள்ளன. இங்கு மழை வெள்ள அனர்த்தம் முடிந்து நீண்ட நாள்களாகியும், இந்தப் பகுதிகளில் மக்கள் வெள்ள அனர்த்தத்திலிருந்து மீள முடியாத நிலையில் உள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:

எம்மை இந்தப் பகுதிகளில் குடியேற்றும் போது இந்தப் பகுதிகள் பள்ளமான பகுதிகளாகவே காணப்பட்டன. இவற்றை அபிவிருத்தி செய்து தருவோம் எனத் தெரிவித்தனர். ஆனால் இன்று வரை குறைபாடு நிவர்த்தி செய்யப்படாத நிலையியே இந்தப் பகுதிகள் காணப்படுகின்றன. நாம் வருடம் தோறும் இவ்வாறான வெள்ள இடருடனேயே வாழ்ந்து வருகின்றோம்.

இதேவேளை, வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட இந்த வீட்டுத்திட்டமும் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத்தர எவரும் முன்வரவில்லை. இவ்வாறு வெள்ளத்தால் சூழ்ந்த நிலையில் எம்மால் தொடர்ந்தும் வாழ முடியாது. இதற்கான நடவடிக்கையை அதிகாரிகள் துரிதப்படுத்தி தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் - என்றனர். (ற-6)

### கலந்துரையாடல்

மன்னார் மாவட்ட இளைஞர் கழகங்களின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் மன்னார் மாவட்ட இளைஞர்கள் சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த கலந்துரையாடலுக்கு உத்தியோகபூர்வமாக கடிதங்கள் அனுப்பியபோதும் இளைஞர் சம்மேளன அதிகாரிகள் கலந்து கொள்ளாமையால் இளைஞர் கழகங்களின் வளர்ச்சி குறித்து முக்கிய முடிவுகள் எடுக்க முடியவில்லை என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு செய்ய முடிய வில்லை எனவும் செயலாளர் வசந்த் தெரிவித்தார். (ய-213)



## மணல் அகழ்ந்தனரென சாரதிகள் மூவர் கைது

கிளிநொச்சி,பெப்.4

சட்ட விரோதமாக மணல் அகழ்ந்த குற்றச்சாட்டில் சாரதிகள் மூவர் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

கல்லாறு பிரமந்தனாறுப் பகுதியில், அனுமதிப்பத்திரத்துக்கு முரணாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

3 டிப்பர்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்தார். (க-113)

## கடத்தப்பட்ட கஞ்சா கைப்பற்றப்பட்டது

கிளிநொச்சி,பெப்.4

மோட்டார் சைக்கிளில் கடத்தப்பட்ட 15 கிலோ 450 கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

பளை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய புலோப்பளை பகுதியில் பொலிஸார் நேற்று முன்தினம் சோதனையில் ஈடுபட்டனர்.

மோட்டார் சைக்கிளில் கஞ்சாவைக் கடத்திச் சென்றவர் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடியுள்ளார். அவர் கொண்டு சென்ற கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றினர். தப்பிச்சென்ற சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணரட்ன தெரிவித்தார். (க-113)

## புதுவித நோய்ப் பரவல் காரணமாக உழுந்துச் செய்கை பாதிப்பு

### விவசாயிகள் விசனம் தெரிவிப்பு

வவுனியா, பெப். 4

வவுனியாவில் புதுவித நோய்த் தாக்கத்தால் உழுந்துச் செய்கை பாதிப்படைந்துள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.



வவுனியாவில் கடந்த வருட இறுதியில் 15 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் உழுந்து செய்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. தற்போது அது விதைக்கப்பட்டு அறுவடைக் காலத்தை நெருங்கும் நிலையில் உழுந்தின் இலைகளில் ஒரு விதமான நோய்த்தாக்கம் பீடித்துள்ளது. இதனால் இலைகள் மஞ்சள் நிறமாக மாறியுள்ளது.

மரத்தில் காய் பிடிக்கும் நேரத்தில் இவ்வாறு நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளமையால் விளைச்சலில் பெரும் பின்னடைவு ஏற்பட வாய்ப்புள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

கடன்பட்டே தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில் தற்போது அறுவடைக் காலத்தில் ஏற்பட்டுள்ள நோய்த்தாக்கம் காரணமாக உற்பத்திச் செலவுகள் பன்மடங்காக அதிகரித்துள்ளன. இதனால் வருமான இழப்பை சந்திக்கும் அவல நிலைமை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஒரு கிலோ உழுந்து 2 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவரும் நிலையில் தற்போது அறுவடை செய்யும் உழுந்தை சில இடைத்தரகர்கள் கிலோ 350 ரூபாவுக்கு கொள்வனவு செய்து அதிக விலைக்கு விற்று கொள்ளை இலாபம் ஈட்டிவரும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளின் மத்தியில் உழுந்தை விதைத்துள்ளோம். அதன் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும்படியாக உழுந்துக்கு விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இடைத்தரகர்கள் தமது இலாபத்தை மாத்திரம் கருத்தில் கொள்ளாமல் நியாயமான விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டும் என விவசாயிகள் மேலும் தெரிவித்தனர். (ய-110)

## சாதனையாளர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி, பெப். 4

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்த மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இப் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு 168 மாணவர்கள் கடந்த வருடம் தோற்றினார்கள். இதில் 136 மாணவர்கள் சித்தி பெற்றிருக்கிறார்கள். அதாவது 93% வீத சித்தி ஈட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ய-222)

## வீட்டில் கைப்பற்றப்பட்ட 13 கிலோ கஞ்சா

கிளிநொச்சி,பெப்.4

கிளிநொச்சி மலையாளபுரத்தில், வீட்டுக்குள் புதைக்கப்பட்டிருந்த 13 கிலோ கஞ்சா நேற்று கைப்பற்றப்பட்டது என்று மாவட்ட மது ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அசங்க பண்டார குணத்திலக்கவின் வழிநடத்தலில், மேற்கொள்ளப்பட்ட சோதனையில், 13 கிலோ 315 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அதனை உடைமையில் வைத்திருந்த நபரும் கைதுசெய்யப்பட்டார். வீட்டு முற்றத்தில் சிறிய சமையலறை போன்று கொட்டில் அமைத்து, அதற்குள் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தது.


சந்தேகநபர் சான்றுப் பொருள்களுடன், மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி தலைமைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (க-6)

# சட்டவிரோத மாடறுப்பு; தடுக்குமாறு மக்கள் கோரிக்கை!

**வவுனியா, பெப்.4**
**வவுனியா பட்டாணிச்சூர் பகுதிகளில் சிலர் சட்டவிரோதமான முறையில் திருட்டு மாடுகளை வெட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன், அதன் கழிவுகளை பட்டக்காடு குளத்துக்கு அருகில் வீசி வருகின்றனர். இதனால் அந்தப் பகுதியைச் சூழவுள்ள பகுதிகளில் துர்நாற்றம் வீசி வருகின்றது.**



இதனால் அருகில் வசிப்பவர்கள் உட்பட வீதியால் செல்பவர்கள் எனப் பலரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனவே இதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
வவுனியா பட்டாணிச்சூர் பகுதிகளில் சிலர் சட்டவிரோதமான முறையில் திருட்டு மாடுகளை வெட்டும் நடவடிக்கையில் நீண்டகாலமாக ஈடுபட்டு வருகின்றனர்.
இது குறித்து நகரசபையினருக்கு பல்வேறு முறைப்பாடுகள் வழங்கப்பட்டும் அவர்கள் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.
இவ்வாறு சட்டவிரோதமான முறையில் வெட்டப்படும் திருட்டு மாடுகளின் கழிவுகள் அனைத்தும் உரைப்பைகளில் போடப்பட்டு பட்டக்காடு குளக்கட்டில் வீசப்பட்டு வருகின்றன.
வீசப்படும் கழிவுகள் கால்நடைகள் மற்றும் பறவைகளால் வீதிகளில் ஆங்காங்கே இழுத்து விடப்படுவதால், துர்நாற்றம் வீசிவருவதுடன் பட்டக்காடு குளம் மாசடைந்து வருகிறது.
எனவே இந்நடவடிக்கையைக் கட்டுப்படுத்தி சட்டவிரோதமாக வெட்டப்படும் மாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றனர். (ற)



## புதுக்குடியிருப்புப் பகுதிகளில் கால்நடைகளால் விபத்துக்கள்

முல்லைத்தீவு, பெப்.4
புதுக்குடியிருப்புப் பிரதேசத்தின் நகர்ப் பகுதிகளில் பகல், இரவு வேளைகளில் பெருமளவான கட்டாக் காலிக் கால்நடைகள் வீதிகளில் படுத்து உறங்குகின்றன. இதனால் வீதி விபத்துக்கள் அதிகளவில் ஏற்படுகின்றன என அந்தப் பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.
நீண்டகாலமாக கால்நடைகள் கட்டாக்காலிகளாக வீதிகளில் திரிகின்றன அத்துடன் வீதிகளிலேயே படுத்தும் உறங்குகின்றன. இதனால் வாகனங்களில் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் நாள்தோறும் விபத்துக்களும் இடம்பெறுகின்றன.
எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இவற்றைக் கட்டுப்படுத்தி நகரின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என அந்தப் பிரதேசவாசிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-19)






## பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவருக்கு நடமாடும் சேவை

மன்னார், பெப்.4
மன்னார் மாவட்டத்தில், மாந்தை மேற்கு மேலதிக மாவட்ட பதிவாளர் கிளையின் சிறுவர் பிரிவினரின் ஏற்பாட்டில் பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவர்கள் தொடர்பான நடமாடும் சேவை கடந்த திங்கட்கிழமை காலை மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் அமைப்பின் அனுசரணையில், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரனின் வழிகாட்டுதலின் கீழ் வடக்கு வலய பிரதிப்பதிவாளர் நாயகம் ந.நடராஜா மற்றும் உத்தியோகத்தர்களால் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.
இதில் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 44 சிறுவர்களுக்கும், மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 39 சிறுவர்களுக்கும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 12 சிறுவர்களுக்கும் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 9 சிறுவர்களுக்கும் பிரதிப் பதிவாளர் நாயகத்தால் அனுமதி அளிக்கப்பட்டு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. (ச-56)

## இலங்கைக்கு மட்டுமே சுதந்திரம்; தமிழர்கள் மீது அடக்குமுறையே!

### செல்வம் எம்.பி. தெரிவிப்பு

மன்னார்.பெப்.4
தமிழ் மக்கள் எப்பொழுது சுதந்திரத்தை உணர்கிறார்களோ. அப்போது தான் முழு இலங்கைக்கான சுதந்திரம் கிடைக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
சுதந்திரம் என்பது ஒவ்வொரு உயிரினதும் பிறப்புரிமை. அது இலங்கைத் தமிழ் மக்களுக்கு இல்லாமல் போய்விட்டது. ஒரே தேசம், ஒரே சட்டம் என்று கூறும் சிங்கள அரசு, தமிழர் தாயகத்தையும், சிங்களப் பிரதேசத்தையும் இரு வேறு கண்கள் கொண்டு பார்க்கிறது.
தமிழர் பிரதேசத்தில் உள்ள கோவில் காணிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் விவசாய நிலங்கள் போன்றன அபகரிப்புச் செய்யப்படுகின்றன. தமிழர்களின் புராதன சின்னங்கள் அழிக்கப்பட்டும் வருகின்றன.
போர் முடிந்தும் இன்னும் இராணுவத்தின் பிடிக்குள் இருக்கின்றேன் என்றே மக்கள் உணர்கின்றனர். இந்த நிலையில் இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள். என்றார். (க-213)



## வள்ளுவர் தினம் அனுஷ்டிப்பு

வவுனியா, பெப்.4
திருவள்ளுவர் தினம் வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது அவரது சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.
வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் உப தவிசாளர் சு.குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழருவி சிவகுமாரன் திருவள்ளுவர் தொடர்பான சிறப்புரையை நிகழ்த்தினார்.
நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான நா.சேனாதிராஜா, ரி.கே.ராஜலிங்கம், சு.காண்டீபன், செயலாளர் இ.தயாபரன், முச்சக்கரவண்டி சங்கத் தலைவர் ரவீந்திரன், சமூக ஆர்வலர் சந்திரகுமார், நகரசபை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ந-110)

## பாடசாலை வீதியை உடன் புனரமைக்குக

### மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,பெப்.4
ஒட்டுசுட்டான் - முத்தையன்கட்டு கிராமத்தின் பாடசாலை வீதியைப் புனரமைத்துத்தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
முத்தையன்கட்டு குளப்பகுதியிலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும் 3 கிலோ மீற்றர் நீளமான பிரதான வீதி, போர்க் காலத்தின் பின்னர் புனரமைக்கப்படவில்லை. மழைகாலங்களில் வீதியைப் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. முத்தையன்கட்டு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சுமார் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர். முத்தையன்கட்டு இடதுகரை மற்றும் வலதுகரை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களின் பிரதான போக்குவரத்துப் பாதையாகவும் இதுவே உள்ளது. எனவே கிராமத்தின் பிரதான போக்குவரத்து வீதியை உடன் சீர்செய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-12)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நீண்டு ஒலிக்கும் நீதிக்கான குரல்

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை எதிர்த்து பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் என்ற கோஷத்தோடு, மிகப்பெரிய ஜனநாயகப் போராட்டம் நேற்றுத் தொடங்கிவிட்டது. முன்னரே எதிர்பார்த்ததைப் போல, பொலிஸ் மூலமாக நீதிமன்றத்தை அணுகி, போராட்டத்தைத் தடுக்க அரசாங்கம் முனைந்தது. அவ்வாறு தடை உத்தரவு வாங்குவதன் மூலம் மூலைக்கு மூலை, சந்திக்குச் சந்தி பொலிஸையும் அதிரடிப்படையையும் குவித்தால், மக்கள் பயந்துபோய் அடங்கிவிடுவார்கள் எனவும் ஆட்சியாளர்கள் எண்ணினர். ஆனால் நினைப்பதெல்லாம் நடப்பதில்லையே. கொட்டும் மழை நடுவேயும், பெருமளவான அரசியல்வாதிகளும், மதத் தலைவர்களும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் சாதாரண மக்களும் ஒன்றுகூடி, பொலிகண்டியை நோக்கிய பயணத்தைத் தொடங்கிவிட்டனர்.

ஜெனிவா மனித உரிமைகள் அமர்வு இடம்பெறவுள்ள சூழமைவில், மக்கள் தமக்கான நீதி கேட்டு போராட்டங்களை பெருமெடுப்பில் நிகழ்த்துவது இலங்கை அரசாங்கத்தை நெருக்கடி நிலைக்குள் தள்ளும். ஏனெனில் இலங்கையில் இறுதிப்போரின்போது, இடம்பெற்ற மனிதப்படுகொலைகளுக்கு நீதி வழங்கவேண்டிய கட்டாயம் ஏன்? என்ற கேள்விக்கு, நீதிகோரும் இந்த ஜனநாயகப் போராட்டங்களை சர்வதேச நாடுகள் ஆதாரமாகக் காட்டமுடியும்.

'தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு 12 வருடங்களாக நீதி கேட்டு தமிழர்கள் ஜனநாயக ரீதியாகப் போராடுகின்றனர். ஆனால் அவர்களுக்கு நீதி வழங்க வேண்டிய இலங்கை அரசாங்கம், காலத்தை இழுத்தடித்து வருவதோடு, இன்னமும் பல்வேறு வழிகளில் இன ஒடுக்கலை தொடர்ந்தபடியே இருக்கின்றது. எனவே இம்முறை இந்த விடயத்தில் கால அவகாசம் கேட்டு தப்பிக்காமல், நீதிக்கான பொறிமுறைக்கு இலங்கை அரசாங்கம் இணங்க வேண்டும்' என்ற சாரப்படவே ஜெனிவாவில் இலங்கை விவகாரத்தில் சர்வதேசம் அழுங்குபிடி பிடிக்கப்போகின்றது. அதற்கான கோடிகாட்டல்களை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் புலப்படுத்தத் தொடங்கிவிட்டார். அதனால் சீனா தலைமையில் தனக்கு ஆதரவான அணியைத் திரட்டும் வேலைகளில் இலங்கையும் இறங்கிவிட்டது.

இருப்பினும், தங்கள் நிலத்தைப் பறித்தும், உறவுகளைக் கொன்றும், பிள்ளைகளைக் காணாமல் ஆக்கியும், இளையோரைச் சித்திரவதை செய்து சிறைவைத்தும், இன ரீதியாக ஒடுக்குமுறைகளை நிகழ்த்தியும் தன்னிஷ்டப்படி எதுவும் செய்யலாம் என்றிருக்கும் இலங்கைக்கு, ஜெனிவாவில் இம்முறை இக்கட்டு நிலை வந்தே தீரும். இப்படி எரிந்து கொண்டிருக்கும் ஜெனிவாவில் எண்ணெயை ஊற்றுவது போல தமிழர்கள் போராட்டத்தில் இறங்கினால், இனப்படுகொலையின் சூத்திரதாரிகளை கொண்டமைந்துள்ள அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்குமா என்ன? தங்கள் தரப்பு சமாளிப்புகளையெல்லாம் இத்தகைய மக்கள் போராட்டங்கள் ஒன்றுமில்லாத தாக்கிவிடும் என்றும் அரசாங்கத்துக்குத் தெரியும். எனவேதான் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை ஒலிக்கப்போகும் நீதிக்கான குரல்களை முளையிலேயே கிள்ளிவிட ஆட்சியாளர்கள் திட்டம் போட்டனர். ஆனால் அவர்கள் போட்டுவைத்த திட்டத்தையெல்லாம் தவிடுபொடியாக்கி, கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல், ஓர்மத்தோடு புயலெனப் புறப்பட்டிருக்கிறது போராட்டம்.

இம்முறையாவது எங்கள் குரல் ஜெனிவாவை எட்டுமா? என்பதே ஒவ்வொரு தமிழரினதும் ஏக்கம். ஜெனிவா என்பது அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளுக்காக நடத்தப்படும் ஒரு நாடகமே என்பது புரிந்திருந்தாலும், அந்த மாய நாடகத்தின் விளைவாக மஹிந்தவின் ஆட்சியே தூக்கியெறியப்பட்டும் இருந்தது. அப்படி ஏதேனும் ஒரு அற்புதம் நிகழ்ந்துவிடாதா என்ற தவிப்போடு, நீதிக்கான குரல் பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை நீண்டு, ஒலித்துக்கொண்டே இருக்கின்றது.

### இன்றைய கருத்தோவியம்




நன்றி - அவந்த ஆட்டிகல

# உரிமைகள் புறக்கணிக்கப்பட்டால் அரசு வெறுப்பையே சம்பாதிக்கும்

### ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா தெரிவிப்பு



**கொழும்பு,பெப்.4**

**ஒரு நாட்டின் பிரஜைக்குரிய கௌரவத்தை, உரிமைகளை அரசு என்ற வகையில் ஆளுந்தரப்பு உறுதிப்படுத்தியாக வேண்டும். அதனைப் புறக்கணிக்கும் பட்சத்தில் மக்கள் மத்தியில் வெறுப்பு ஏற்படும். அரசின் வக்கிரமிக்க செயற்பாடுகளை அது எடுத்துக் காட்டும்.**

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கட்சி அரசியலில் மக்கள் விருப்பை மதித்து அரங்கேறும் ஓர் அடிப்படை விருப்பை நிறைவேற்றும் செயற்பாட்டை ஒரு கட்சி முன்னெடுத்து உறுதிப்படுத்தினால், அதை மறுகட்சி தடுக்கும் செயற்பாடு மக்கள் விருப்பில் அரசியல் சாயம் பூசி வக்கிரத்தோடு அணுகுவதாக அமைந்துவிடும். கடந்த அரசு உறுதிப்படுத்திய மொழி ரீதியான சமநிலை மதிப்பும், உரிமையும் இந்த அரசால் மறுக்கப்படுகின்றபோது, மக்கள் மனதில் வெறுப்பைத் தவிர வேறு எதையும் அது விதைப்பதில்லை. தனது மொழி உரிமை மதிக்கப்படும்போதுதான், ஒருவர் தன்னைத் தன் மண்ணோடு பிணைத்துக்கொண்டு கர்வத்தோடு நெஞ்சுயர்த்தி நிற்பார். இப்போதுள்ள அரசு அந்த உணர்வைச் சிதைத்துவிட்டு ஒரே நாடு என்ற எதிர்பார்ப்பை விதைக்க முயல்கின்றது. இரு வேறு உணர்வுள்ள நிலையைத் தோற்றுவித்து ஒரு மொழியை முழுமையாக மறுதலித்து தேசப்பற்றை வலியுறுத்தும் செயற்பாட்டுக்குப் பாகுபாடுள்ள வக்கிரம் என்பதைத் தவிர வேறு எதுதான் பொருத்தமாக இருக்கும்.

மக்களின் மனதில் இருக்கின்ற பிரிகோடுகளை அகற்றி ஒருமைப்பாட்டை விதைப்பதில் தேசிய தினத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் மொழி உரிமைக்காக நாம் ஓரணியில் நின்று எமது கண்டனத்தைப் பதிவுசெய்வதும் மிகவும் முக்கியமான விடயமாகும் - என்றுள்ளது. (க-இ)

### ஈஸ்டர் தாக்குதல்;

# ஆணைக்குழுவின் அறிக்கை அமைச்சரவையில் ஆராய்வு

கொழும்பு,பெப்.4

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில், முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அமைச்சரவையில் ஆராயப் படவுள்ளன.

அதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விசேட அமைச்சரவைக் கூட்டமொன்றை கூட்டவுள்ளார். நீதி அமைச்சர் அலி சப்ரி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த முதலாம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எப்போது முன்னெடுக்கப்படும் என்று நீதி அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், " இது சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு விசேட அமைச்சரவைக் கூட்டமொன்று கூட்டப்படும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார். இதன்படி விரைவில் நடவடிக்கைகள் இடம்பெறும் என்று நம்புகின்றோம்." என்றார். (க-44)

# நாட்டைக் காட்டிக் கொடுக்கும் போராட்டங்களை அனுமதியோம்

## அமைச்சர் சரத் வீரசேகர இறுமாப்பு

**கொழும்பு,பெப்.4**

**பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் மட்டுமல்ல யாழ்ப்பாணம் தொடக்கம் கொழும்பு வரைக்கும், நாட்டை சர்வதேசத்திடம் காட்டிக்கொடுக்கும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால், அவற்றுக்கு ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டோம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

அரசின் அராஜகச் செயல்களுக்கு எதிராக தமிழின அழிப்புக்கு எதிராக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான போராட்டத்துக்கு, சில இடங்களில் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் அமைச்சரிடம் வினவியபோது, அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளைத்தான் எமது இராணுவத்தினர் கூண்டோடு அழித்தார்கள். தமிழினத்தை, தமிழ் மக்களை அழிக்கும் நடவடிக்கைகள் போரின்போதோ அல்லது போரின் பின்னரோ இங்கு இடம்பெறவில்லை.

தமிழின அழிப்புக்கு எதிராக என்ற பெயரிலும், அரசுக்கு எதிராக என்ற பெயரிலும் நாட்டை ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் காட்டிக்கொடுக்கவே பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் போராட்டங்களை முன்னெடுக்க தமிழ் அரசியல்வாதிகளும், அவர்களுடன் ஒத்திசைந்து செயற்படும் தமிழ் சிவில் சமூக அமைப்பினரும் தீர்மானித்துள்ளனர்.

நாடு கொரோனாத் தாக்கத்துக்கு முகம் கொடுத்துள்ள நிலையில், இப்படியான போராட்டங்கள் தேவைதானா என்பதைத் தமிழ் அரசியல்வாதிகள் சிந்திக்க வேண்டும். தற்போதைய நிலைமையில் தேவையற்ற போராட்டங்களைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் பொலிஸாருக்கும், நீதிமன்றங்களுக்கும் உண்டு. நீதிமன்றங்களின் தடை உத்தரவுகளை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது" - என்றார். (க-22)

## சம்பள உயர்வு பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

கொழும்பு, பெப்.4

சம்பள நிர்ணய சபையில் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவிருந்த பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பிலான முதலாவது பேச்சு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் கம்பனிகள், இந்தப் பேச்சுவார்த்தையை இம்மாதம் 8ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவிடம் கால அவகாசம் கோரியுள்ளன.

ஆவணங்கள் பலவற்றைச் சமர்ப்பிப்பதற்காகவே இவ்வாறு கால அவகாசத்தை கம்பனிகள் கோரியுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-இ)

### நாட்டில் இதுவரை

## ஒரு லட்சம் பேருக்கு கொரோனாத் தடுப்பூசிகள்

கொழும்பு, பெப்.4

நாட்டில் இதுவரை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் கடந்த 29 ஆம் திகதி முதல் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் நேற்றைய தினம் மாத்திரம் 23 ஆயிரத்து 217 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் இதுவரையில், ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 767 பேருக்கு 'ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா கொவிஷீல்ட்' தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## நாட்டில் இதுவரை 17 லட்சம் பி.சி.ஆர்.

கொழும்பு, பெப்.4

நாட்டில் இதுவரை 17 லட்சத்து 47 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை 17 லட்சத்து 47 ஆயிரத்து 494 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் நாட்டில் கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி மாத்திரம் 19 ஆயிரத்து 285 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)


## தேர்ச்சி பெற்ற ஆரோக்கிய, நல்வாழ்வு நிபுணர்களை வாடிக்கையாளர்கள் இலவசமாகவே அணுகுவதை இயலுமாக்கும் AIA இன்ஷூரன்ஸ்

HEALTHIER, LONGER, BETTER LIVES

காப்புறுதித் துறையில் மற்றுமொரு முதலாவதும் மற்றும் புத்தம் புதியதொரு முயற்சியுமான ஆரோக்கிய, நல்வாழ்வு சேவைகளை வழங்குவதை AIA இன்ஷூரன்ஸ் ஆரம்பித்திருக்கின்றது. AIA வாடிக்கையாளர்கள் தற்போது oDoc செயலியின் (அப்பின்) ஊடாக முற்றிலும் இலவசமாகவே ஆரோக்கிய, நல்வாழ்வு விசேட நிபுணர்களை அணுகக்கூடியதாக இருக்கும். இந்த முன்னோடியான சலுகையினை ரூபா.100,000 க்கும் அதிகமான வருடாந்த கட்டுப்பணப் பெறுமதியுடைய காப்புறுதித் திட்டம் ஒன்றை வைத்திருக்கும் அனைத்து வாடிக்கையாளர்களும் அனுபவிக்க முடியும். மேலும் இலங்கை மருத்துவ சபையில் பதிவுசெய்துள்ள ஆரோக்கிய, நல்வாழ்வு நிபுணர்கள் இதன் மூலமாக தொடர்ச்சியான ஆலோசனைகளை முன்னெடுப்பார்கள். உங்களின் உடல், உள, ஊட்டச்சத்து போன்ற தேவைகளின் அடிப்படையில் நீங்கள் விசேட ஆரோக்கிய, நல்வாழ்வு நிபுணர்களைத் தெரிவுசெய்யவும் முடியும். நீங்கள் உங்களின் வீட்டில் மிகவும் சௌகரியமாக இருந்தவாறே ஊட்டச்சத்து நிபுணர்கள், உணவு நிபுணர்கள், உள ஆரோக்கிய நிபுணர்கள் அல்லது இயன் மருத்துவர்கள் போன்றோரிடமிருந்து வருடமொன்றுக்கு இலவசமான ஆறு கைபேசி செயலியின் ஊடான ஆலோசனைகளைப் பெறக்கூடியவாறே இச்சலுகை வடிவமைக்கப்பட்டுள்ளது. நல்வாழ்வு மற்றும் ஆரோக்கிய ஆலோசனைகளுக்காக AIA ஒரு வருடத் திட்டத்தைப் பரிந்துரைத்துள்ள அதேநேரத்தில் வாடிக்கையாளர்கள் அவர்கள் விரும்பும் நேரத்தில், விரும்பியவாறு, அவர்களுக்கு விருப்பமான ஆரோக்கிய, நல்வாழ்வு நிபுணர்களைத் தெரிவு செய்தும் கொள்ளலாம்.

AIA இன் பிரதான நிறைவேற்று அதிகாரி நிகில் அத்வானி கருத்துத் தெரிவிக்கையில், AIA என்பது வெறுமனே மிகச்சிறந்த காப்புறுதித் திட்டங்களை உருவாக்குவதோடு மட்டுமின்றி வாடிக்கையாளர்களுக்கு இறுதி வரையில் அனுகூலங்களை வழங்கக்கூடிய திட்டங்களை நிறைவேற்றும் நிறுவனமாகும். எங்களுடைய நோக்கம், வாடிக்கையாளர்களுக்கு நீண்ட ஆயுளுடன், ஆரோக்கியமான, மிகச்சிறந்த வாழ்க்கையினை வழங்குவதாகும் ஆகவே எங்களுடைய வாடிக்கையாளர்கள் மிகவும் ஆரோக்கியமாக இருப்பதற்கும் மற்றும் அவர்களின் நல்வாழ்வுப் பயணத்தைத் தொடரவும் அவர்களுடைய வாழ்க்கையில் அர்த்தமுள்ள நேர்மறையான விளைவுகளை இலகுவாக எவ்வாறு ஏற்படுத்துவது என்பது பற்றியுமே நாங்கள் கவனத்திற்கொள்ள வேண்டியிருந்தது. எனவே எங்களுடைய வாடிக்கையாளர்களின் வாழ்க்கையில் உண்மையாகவே பெறுமதியைச் சேர்ப்பதற்கும் மற்றும் அவர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் உதவுவதற்காகவே நாங்கள் இங்கே அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

AIA இன் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி சிவந்தி டீ அல்விஸ் கருத்துத் தெரிவிக்கையில் எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு மிகவும் அவசியமான மற்றும் வினைத்திறனான திட்டம் ஒன்றை காப்புறுதித் துறையில் முதன் முதலாக அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். ஒவ்வொருவரும் தன்னால் எந்தளவுக்கு மிகச்சிறப்பானவராகச் செயற்பட முடியுமோ அந்தளவுக்கு சிறப்பாகச் செயற்பட வேண்டும் என நாங்கள் நம்புகின்றோம். அதாவது நீங்கள் உங்களின் ஆரோக்கியத்திலும், மற்றும் நல்வாழ்விலும் மிகவும் திருப்திகரமானவராக இருக்க வேண்டும் என்பதையே இது கருதுகின்றது. மேலும் நம் அனைவராலும் ஓரளவு தொழில்நுட்ப அறிவையும் மற்றும் உதவிச் சேவையையும் பயன்படுத்த முடியும் என்பதனாலும், எங்களுடைய வாடிக்கையாளர்களின் நல்வாழ்வு, வாழ்க்கைப் பயணங்கள் முழுவதும் அவர்களை ஊக்குவிக்கவும் மற்றும் அவர்களுக்கு உதவுவதற்காகவும் இலங்கையின் முன்னோடியான டெலிமெடிசின் சேவை வழங்குநரான oDoc உடன் நாங்கள் கைகோர்த்திருக்கின்றோம் எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

AIA இனுடைய ஆரோக்கிய மற்றும் நல்வாழ்வுத் தீர்வுகளைப் பற்றிய மேலதிக விவரங்களுக்கு அல்லது இந்த இலவசமான சேவையில் நீங்களும் பதிவுகளை மேற்கொள்வதற்கு தயவுசெய்து AIA இன்ஷூரன்ஸை 0112 310 310 இனூடாக அழையுங்கள்.






## டொமினிக் ஜீவா அஞ்சலிக் கூட்டம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், பெப்.4

மறைந்த பிரபல எழுத்தாளரும், மல்லிகை சஞ்சிகை ஆசிரியருமான டொமினிக் ஜீவாவுக்கான அஞ்சலிக் கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை பணிமனையில் இடம் பெறவுள்ளது. எழுத்தாளர் ஐ.சாந்தனின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் அஞ்சலி உரைகளை தொழிற்சங்க செயற்பாட்டாளர் பொ.சிவபாலன், சட்டத்தரணியும் எழுத்தாளருமான சோ.தேவராஜா, எழுத்தாளர் சி. கருணாகரன் மற்றும் தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும், தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவருமான க.தணிகாசலம் ஆகியோர் ஆற்றவுள்ளனர். தொடர்ந்து சபையோரின் அஞ்சலிப் பகிர்வும் இடம்பெறவுள்ளது. சுகாதார ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக அனைவரையும் இவ் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ச)

### அரசியல்வாதிகளின் பிடுங்குப்பாடு:

# எல்.ஆர்.சி. வடக்கு அலுவலக கோப்புகள் அனுராதபுரத்துக்கு!

யாழ்ப்பாணம், பெப். 4

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் (எல்.ஆர்.சி.) வடக்கு மாகாணத்தின் 4 மாவட்டங்களினதும் கோப்புக்களை கடந்த முதலாம் திகதி தொடக்கம், அனுராதபுரம் அலுவலகத்துக்குக் கையளிக்குமாறு கொழும்பிலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வடக்கு மாகாண அலுவலகத்துக்குரிய கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களின் கோப்புக்களையே அனுராதபுரம் அலுவலகத்துக்குக் கையளிக்க பணிக்கப்பட்டுள்ளது. இந்த 4 மாவட்டங்களிலுமே காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு அதிகளவான காணிகள் உள்ளன. இங்குள்ள அரசியல்வாதிகளின் பிடுங்குப்பாடு மற்றும் பலவந்தமாக காணி பிடிக்கும் மக்களின் செயற்பாடுகள் என்பவை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிய வருகின்றது. (ஒ.ப.5,319)

## புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.4

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி ஊழியர் நலன் புரிச் சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவு கொத்தணிக் கலையரங்க மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது. இதில், தலைவராக, கி. சத்தியகாந்தன், உபதலைவராக மாதவலிங்கம், பொருளாளராக சி.சுகன்யா, செயலாளராக ற.சுருதி, போசகராக. சுதாகரன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக இ. குகனேஸ்வரன், நா. தவனேஸ்வரன், து. ஜெயக் குமார் மற்றும் நா. சிவகுமார் ஆகியோரும் தெரிவாகினர். (வ-63)

# வேலை நிறுத்தம் செய்தால் பேருந்துகள் அரசுடைமை

### *அமைச்சர் திலும் அமுனுகம எச்சரிக்கை*

கொழும்பு, பெப்.4

வேலை நிறுத்தம் செய்தால் தனியார் பேருந்துகள் அரசுடைமையாக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம எச்சரித்துள்ளார்.

ஹபரன பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இவ்விதம் குறிப்பிட்டுள்ளார் என்று ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

"அநீதியான முறையில் கோரிக்கைகளை முன்வைத்து தனியார் பேருந்துச் சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்தால் அவற்றுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நோய்த்தொற்று பரவலுக்கு மத்தியில் அரசு தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு அதிகளவில் சலுகைகளை, நிவாரணங்களை வழங்கியுள்ளது. மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அரசு எடுக்கும் தீர்மானங்களை போராட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தங்களால் தடுத்து நிறுத்திவிட முடியாது. தனியார் பேருந்து உரிமையாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தால், வீதி அனுமதிப்பத்திரம் இல்லாத தனியார் பேருந்துகளை தற்காலிக குத்தகை அடிப் படையில் இலங்கை போக்குவரத்துச் சபை கையகப்படுத்தி, பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளது" இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

# பதவியுயர்வுக்குத் தகவல்கள்; கடிதங்கள் தனிச் சிங்களத்தில்!

### *தமிழுக்கு மாற்றத் திணறும் உத்தியோகத்தர்கள்*

யாழ்ப்பாணம்,பெப்.4

உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் தரம் III ஐச் சேர்ந்த ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களை தரம் II க்கு பதவியுயர்வு செய்வது தொடர்பான தகவல்களைக் கோரும் கடிதம் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளது. இதனால் குறித்த மருத்துவ உத்தியோகத்தர்கள் அதனை தமிழ் மொழிக்கு மாற்றம்செய்ய முடியாத நிலையில் தத்தளிக்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடிதத்தில் என்ன விவரம் கோரியுள்ளனர், முடிவுத் திகதி போன்ற விவரங்கள் தெரியாமல் உத்தியோகத்தர்கள் சிங்களம் தெரிந்தோரைத் தேடி அலைவதைக் காண முடிகிறது. (ஐ-9)

## குருதிக் கொடையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

யாழ்ப்பாணம், பெப்.4

காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகத்தினர், தையிட்டி கிழக்கு அன்னை வேளாங்கண்ணி இளைஞர் குழுமத்தினருடன் இணைந்து குருதிக் கொடை வழங்கலும் கண் பார்வையில் குறைபாடு காணப்படும் வள்ளுவர்புரம் கிராம மக்களுக்கு மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வும் தையிட்டி கிழக்கு அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயத்தில் நடத்தவுள்ளனர். இந்நிகழ்வுகள் இன்று முற்பகல் 9.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை நடைபெறும் என கழகத் தலை வர் லயன் கா.பீ.ஜெயவிந்தனால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச- 9)

# நெடுந்தீவு மக்களுக்காக ஒன்று சேர்ந்த எம்.பிக்கள்

யாழ்ப்பாணம், பெப். 4

அரசியல், கொள்கை என்று குத்துவெட்டுக்களுக்கு ஆளாகும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நெடுந்தீவு பிரதேச மக்களுக்காக ஒரு விடயத்தில் ஒன்று சேர்ந்தனர்.நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள செபநாயகபுரம், குயிந்தா,பெரியதுறை, பனங்காணி போன்ற இடங்களில் பீக்கென் மின் விளக்குகள் (beacon light) பொருத்தப்படவேண்டும் என்று பிரதேச மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஏற்கனவே சில இடங்களில் இந்த லைட் பொருத்தப்பட்டபோதும் அதைப் பராமரிப்பதற்கு ஆள்கள் இன்றியும், அதற்கான மின் கட்டணத்தைச் செலுத்தாததாலும் அவை பழுதடைந்துள்ளன. எனவே குறித்த பகுதிகளுக்கு மின் கட்டணத்தைச் செலுத்துவது யார் ? என்பது தொடர்பில் தெரிவிக்கப்படவேண்டும் என்று பிரதேச செயலர் மீனவர் சங்கச் சமாசத்திடம் வினவினார். இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அது தொடர்பான விவரங்களை இலங்கை மின்சார சபையின் பிரதிநிதியிடம் கேட்டறிந்தார். இதன்போது கருத்துக்களைத் தெரிவித்த மீனவர்கள் மின்சாரக் கட்டணங்களுக்கான பொறுப்பை கூட்டத்துக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே பொறுப்பெடுங்கள் என்று கோரினர், அதன்படி குறித்த பகுதிகளில் மின் விளக்குகளை லைட்டை பொருத்துமாறும் அதற்கான கட்டணத்தை செலுத்துகிறோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். குறித்த கூட்டத்தில் இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், பொ.கஜேந்திரகுமார், செ. கஜேந்திரன் ஆகி யோர் கலந்துகொண்டிருந்தனர். அத்தோடு, அமைச்சர் டக்ளஸ் சார்பில் அவ ரின் பிரதிநிதி கலந்துகொண்டிருந்திருந்தார். (ப-319)

ஹரே கிருஷ்ணா
இறுதிக்கட்டத் திருப்பணியில்
ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலய அமைப்புத்திட்டம்
இல.188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13
தொ.பே: 011 2433325 மின்னஞ்சல்: iskcon@slt.lk

அன்பிற்குரிய நண்பர்களே! நலன்விரும்பிகளே!
உங்கள் தாராள மனப்பாங்கு கொண்ட பங்களிப்பால் இலங்காபுரியின் தலைநகரான கொழும்பில் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலய கட்டிட அமைப்புத் திட்டம் நிறைவுறும் நிலையை எட்டியுள்ளது. உங்கள் அனைவரினதும் தாராள மனப்பாங்கு கொண்ட பங்களிப்பினால் இதுவரை (ரூபா 110.000.000) பதினொரு கோடி ரூபா மதிப்பிலான திருப்பணி வேலைகள் பூர்த்தியடைந்துள்ளது.
இப்பொழுது இறுதிக்கட்ட திருப்பணிகளுக்காக (ரூபா 20.000.000) இரண்டு கோடி ரூபாவிற்கு மேல் தேவைப்படுகின்றது. அதற்காக உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறோம். இப்புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட விரும்பும் அன்பர்கள், ஆதரவாளர்கள், பக்தகோடிகள் யாவரும் ஆகக் குறைந்தது ரூபா 10.000 நிதியுதவி செய்தால் இக்கட்டுமானப்பணி விரைவில் பூரணமடையும். பகவானின் ஆலயம் விரைவில் பூரணமாக நிறைவுற உங்களின் மனப்பூர்வமான பங்களிப்பினை எதிர்பார்க்கின்றோம். நன்றி!



மஹாகர்த்த தாஸ்
ஆலயத் தலைவர்
சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்
இலங்கைக் கிளை

நேரடியாகவோ வங்கி மூலமாகவோ உங்கள் நன்கொடைகளை செலுத்தலாம்

| | | | |
|---|---|---|---|
| Bank Name | : Commercial Bank | Bank Name | : Hatton National Bank |
| Bank Branch | : Kotahena Branch | Bank Branch | : Kotahena Branch |
| Account Name | : ISKCON Temple Fund | Account Name | : ISKCON |
| Account No | : 1120017042 | Account No | : 207010000891 |
| Swift Code | : CCEYLKLX | Swift Code | : HBLILKLX |

இந்த திட்டத்தை பூரணமாக்க ஒவ்வொருவரும் ரூபா 10,000 நன்கொடை வழங்குங்கள்

Sri Sri Radha Krishna Temple Construction Project
INTERNATIONAL SOCIETY FOR KRISHNA CONSCIOUSNESS
Founder : His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada
No.188, New Chetty Street, Colombo 13.
Tel: 011 2433325 | E-mail: iskcon@slt.lk | Web: www.iskcon.lk



சுயாதீன
தரணியின்
ஆனந்தத்தை
அதிகரிக்க
ரம்மியமான
ஆரம்பம்

73வது தேசிய சுதந்திர தினத்தை சுதந்திரமாக கொண்டாடுவோம்



வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
www.selacine.lk
நிதி அமைச்சு - அபிவிருத்தி லோத்தர் சபை | www.dlb.lk

## மின்சாரம் இல்லாத வீடுகள் நெடுந்தீவில் கிடையாது

யாழ்ப்பாணம், பெப். 4

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மின்சாரம் பற்றிய ஆராய்வுகளின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. 24 மணிநேரமும், தடையின்றி அந்த மின்சாரம் வழங்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டமை தொடர்பில் மின்சார சபைக்குக் கூட்டத்தில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கைகளைத் தட்டி தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.(ப-319)

# மஞ்சள் நிறமான குடிதண்ணீர்; ஆய்வு செய்யத் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 4

**நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் வழங்கப்படும் குடிதண்ணீர் மஞ்சள் நிறமாக உள்ளதாக இது தொடர்பில் ஆய்வு செய்து பிரதேச செயலருக்கு உறுதிப்படுத்தவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குடிதண்ணீர் தொடர்பான விடயங்கள் பேசப்பட்டபோது, கடல் நீரை நன்னீராக்கும் செயற்றிட்டத்தின் ஊடாக பிரதேசத்தில் 899 குடும்பங்களுக்கு இன்னமும் குடிதண்ணீர் பெற்றுக்கொடுக்கப்படவேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் வழங்கப்படும் குடிதண்ணீர் மஞ்சள் நிறமாக உள்ளது என்றும் அதில் சந்தேகம் உள்ளது என்றும் தெரிவித்தனர். கூட்டத்தில் கலந்துகொண்ட வனஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரும் குறித்த கருத்தைத் தெரிவித்தார். அத்தோடு அந்தத் தண்ணீரை வடிகட்டி மீண்டும் பயன்படுத்தும் போது பில்டரில் மஞ்சள் கறள் படிந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் இணைத்தலைவர் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரியை வினவினார். நீர்க் குழாய்களின் இணைப்புக்களில் ஏதேனும் வெடிப்புக்கள் ஏற்பட்டால் இவ்வாறு இடம்பெறலாம் என்றும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரி தெரிவித்தார். எனினும் மக்களுக்கு வழங்கப்படும் நீர் அவர்களுக்கு எந்த நிலையில் செல்கிறது என்பதை அவதானிக்க வேண்டிய பொறுப்பு குறித்த திணைக்களத்தினுடையதே என்று இணைத்தலைவர் வலியுறுத்தினார். இது தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இறுதியில் குடி தண்ணீரை மாதாந்தம் ஆய்வு செய்து அதற்கான அறிக்கை பிரதேச செயலருக்கு வழங்கப்படவேண்டும் என்றும், பிரதேச செயலர் அது சுத்தமான குடிதண்ணீர் என்பதை பிரதேச மக்களுக்கு உறுதிப்படுத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ப-319)

## இன்றைய நாள்



**மேடம்:** எதிர்பாலினத்தவருடன் பழகும்போதும், பேசும்போதும் கவனம் தேவை. திருப்தியான நாளாகும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். பணிகளில் நிதானமாக செயல்படுவது

**இடபம்:** முயற்சிகளில் வெற்றி வரும். எதிர்பார்த்த நன்மை நிகழும். குடும்பக் கவலைகள் மறையும். செலவை சமாளிக்க முடியும். பணவரவு நன்றாக இருக்கும்.

**மிதுனம்:** ஆன்மிக எண்ணங்கள் உருவாகும். தேவையற்ற பயம் தீரும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டு. கனவு நனவாகும். இளைஞர்களுக்கு சிறிய வெற்றி ஏற்படும்.

**கடகம்:** அலுவலகத்தில் உள்ள நிலுவைப் பணிகளை முடித்துக் காட்டுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். பகையைவிடுத்து நட்பாவது பற்றிச் சிந்திப்பீர்கள். லாபம் உயரும்.

**சிம்மம்:** மதிப்பும், மரியாதையும் கூடும். பிறரது செயல்கள் கோபத்தைத் தூண்டலாம். நிதானமாக செயல்படுவது நன்மையைத் தரும். திறமை கூடும். மனஸ்தாபங்கள் நீங்கும்.

**கன்னி:** வேண்டப்பட்டவரின் உடல்நலம் மேம்படும். வீடு கட்டுவீர்கள். எந்தப் பிரச்னையையும் சமாளிக்கும் தைரியம் ஏற்படும். வசதியான வீட்டுக்கு மாறுவீர்கள். கடன்கள் இனி இல்லை.

**துலாம்:** இதுவரை கஷ்டப்படுத்திய மேலதிகாரி மாற்றலாகிச் செல்வார். கொஞ்சம் சேமிக்க முடியும். கற்பனை பயங்களால் சிரமப்படுவீர்கள். அலுவலகப் பணிகளில் இறுக்கமான சூழ்நிலை.

**விருச்சிகம்** இடமாற்றம் உண்டாகலாம். பணிகளை முயற்சியால் முடிப்பீர்கள். மற்றவருக்காக கூடுதல் உழைப்பை வெளிப்படுத்துவீர்கள். கடந்த காலக் கவலைகள் திடீரென்று காணாமல் போகும்.

**தனுசு** கற்பனை வளம் அதிகரிக்கும். காதல் கைக்கூடும் வாய்ப்புள்ளது. முந்தைய முயற்சிகளில் முன்னேற்றமான புதிய வழி கண்டறிவீர்கள். சிலர் பணியிட வாய்ப்பை பயன்படுத்தி முன்னேறுவார்கள்.

**மகரம்** மனஇறுக்கம் தீர்ந்துவிடும். தன்னம்பிக்கையுடன் இருங்கள். மின்சாரம் மற்றும் இயந்திரங்கள் பற்றி எச்சரிக்கை தேவை. பணியிடப் பொருளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம்.

**கும்பம்:** மேலதிகாரி உங்கள் விருப்பமறிந்து நடந்து கொள்வார். மதிப்பு மிக உயரும். முயன்ற விஷயம் நல்லபடியாக நடைபெறும். இத்தனை நாள் பூர்வீகச் சொத்திலிருந்த வில்லங்கம் நீங்கும்.

**மீனம்:** தேங்கியிருந்த விஷயங்களை முனைந்து முடித்துக் காட்டுவீர்கள். வியாபாரிகள் வட்டிக்கு வாங்கியிருந்த கடன்களை அடைப்பர். சாதனைத் திருப்பம் உண்டாகும். சேமிப்பு கூடும்.

# பேருந்தில் ஆசன ஒதுக்கீடு கோரி மாற்றுத்திறனாளிகள் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, பெப்.4

பேருந்துக்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஆசன ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள், முல்லைத்தீவில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பேருந்துக்களில் மாற்றுத்திறனாளிகள் துண்டுப்பிரசுரம் ஒட்டி, தங்களுக்கு ஆசன ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். மாந்தை கிழக்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பினரால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ச்சியாக ஏனைய மாவட்டங்களிலும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று மாந்தை கிழக்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பினர் தெரிவித்தனர். (க-19)





வற்றாப்பளை

## லூர்து அன்னை ஆலயம் மறைமாவட்ட ஆயரால் திறப்பு

முல்லைத்தீவு, பெப்.4

முல்லைத்தீவு, சிலாவத்தை பங்கில் அமைந்துள்ள வற்றாப்பளை புனித லூர்து அன்னை ஆலயம், புதிதாக நிர்மாணிக்கப்பட்டு யாழ். மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசத்தால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் புனித லூர்து அன்னை திருநாளுக்கான ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அன்னையின் அடையாளமாக கொடியும் ஆயரால் ஏற்றிவைக்கப்பட்டது. (ச-222)

## தோட்டங்களைப் பிரிக்கும் சட்டங்களில் திருத்தம்

கொழும்பு, பெப்.4

தென்னந்தோட்டங்களை சிறு துண்டுகளாகப் பிரிப்பது தொடர்பில், தற்போது காணப்படும் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது காணப்படும் சட்டங்களுக்கு அமைய, 10 ஏக்கருக்கும் குறைவான தென்னந்தோட்டங்களைச் சிறு துண்டுகளாகப் பிரிக்க முடியும் என தெங்கு, பனை, கித்துள் மற்றும் இறப்பர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவித்தாரன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் அதனை இரண்டரை ஏக்கர்களாக மட்டுப்படுத்தும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

தென்னந்தோட்டங்களை சிறு துண்டுகளாகப் பிரித்து விற்பனை செய்வதால் நாட்டின் தெங்கு அறுவடைக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு , திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

## தென்மராட்சியில் இடம்பெற்ற மகளிர் சுயதொழில் கண்காட்சி

கொடிகாமம், பெப் 4

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படும் தென்மராட்சி மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை மற்றும் மனைப்பொருளியல் கண்காட்சி நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சு.உஷா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம், கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் ப.செல்லத்துரை சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சசிகலா, சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் இ.ஜானகி, கைதடி மத்தி கிராம அலுவலர் கு.சிவகுமார சர்மா, மாதர் சங்கத்தின் சமாச செயலாளர் திருமதி ம.நிர்மலா மற்றும் தையல் போதனாசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்களும் சிறப்பு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-159)



## சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், பெப்.4

அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலையின் சிறுவர் பூங்கா திறப்பு விழா, கண்காட்சி மற்றும் மாணவத் தலைவர்களுக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வு ஆகியவை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர்.கு. லங்கா பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளன. நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.அரசகேசரி, சிறப்பு விருந்தினர்களாக திருமதி. சிவகுமார். ஏ.வி.ஆர். அறக் கட்டளை அமைப்பு திருமதி பிர தக்சி கோபிநாத் மற்றும் அளவெட்டி மக்கள் வங்கி முகாமையாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

# யாழ்ப்பாணத்தில் காணிகள் இல்லாத 10,135 குடும்பங்கள்

## விசேட நடவடிக்கைக்குத் தீர்மானம்

**யாழ்ப்பாணம், பெப். 4**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் காணிகள் இல்லாத 10 ஆயிரத்து 135 குடும்பங்களுக்கும் காணிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் (காணி) சு.முரளிதரன் காணி தொடர்பான விவரங்களை முன்வைத்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலுமாக 10 ஆயிரத்து 135 குடும்பங்கள் காணிகள் இல்லாமல் உள்ளன. இவர்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தினுள் காணி வழங்க இடமில்லை. மருதங்கேணியில் சிறியளவிலான காணிகள் உள்ளன. அங்கு சென்று குடியமர விரும்புவர்களுக்கு அதனை வழங்க முடியும். பளையில் உள்ள காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் எஞ்சியவர்களை குடியமர்த்தலாம் என்று குறிப்பிட்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு பளையில் எவ்வளவு காணிகள் உள்ளன என்று கேட்டார். இதன்போது ஆளுநர், காணி சீர்திருத்த ஆணைக்குழு நாங்கள் சொல்வதைச் செய்வதில்லை. அவர்கள் தங்கள் இஷ்டப்படிதான் செய்வார்கள் என்று கூறிக்கொண்டு, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலரிடம் பளையில் எவ்வளவு காணி உள்ளது என்று கேட்டார்.

ஆயிரத்து 500 ஏக்கர் வரையில் உள்ளது என்று அவர் பதிலளித்தார். சிறீதரன், பளையில் மொத்தமாக எவ்வளவு காணி உள்ளது என்று கேட்க, 4 ஆயிரத்து 500 ஏக்கர்வரையில்உள்ளது. ஆனால் பலவந்தமாகப் பிடிக்கப்பட்ட காணிகள் உள்ளிட்டவற்றை விடுத்துத் தான் ஆயிரத்து 500 ஏக்கர் என்று கூறுகின்றேன் என்று அலுவலர் பதிலளித்தார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழு குடியிருப்புக்கு 2 பரப்புத்தான் வழங்கும். ஆனால் பளையில் குடியிருப்புக்கு 2 பரப்பு போதாது. ஆகக் குறைந்தது கால் ஏக்கராவது வழங்கவேண்டும், என்று சிறீதரன் கூறினார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழு, பணத்துக்குத்தான் காணி வழங்கும். பரப்புக்கு 30 ஆயிரம் அறவிடுவார்கள். யாழ்ப்பாணத்தைவிட அங்கு காணி விலை குறைவு. எனவே இந்தக் காணியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் மக்களுக்கு அதனைப் பெற்று வழங்கலாம் என்று குறிப்பிட்டார் மேலதிக மாவட்டச் செயலர் முரளிதரன்.

காணி தேவையான குடும்பங்களில், பணத்துக்கு காணி பெற்றுக்கொள்ளக் கூடியவர்கள், பணம் கொடுத்தும் வாங்க முடியாதவர்கள் என்று அடையாளப்படுத்துமாறு இணைத் தலைவர்கள் அறிவுறுத்தினர். அந்த மக்களுக்கு பளையில் விரைவில் காணிகளை வழங்கி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கூறினர்.

(ஒ.ப,5)

# சந்திரசிறியின் முடிவை சவாலுக்கு உட்படுத்துகிறார் பி.எம்.எஸ்.சாள்ஸ்

யாழ்ப்பாணம், பெப். 4

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் ஒப்புதலுடன் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவை, மாகாணசபை எப்படி நியமிக்க முடியும் என்று தற்போதைய வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் கேள்விக்கு உட்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது சுன்னாகம் பிரதேச சபை தவிசாளர் தர்சன், குடிதண்ணீர் விநியோகத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள தமக்கு நிதி தேவை என்று குறிப்பிட்டார். இடர் முகாமைத்துவ அமைச்சு வழங்கிய நிதி ஏன் நிறுத்தப்பட்டது என்று ஆராயப்பட்டது. வடக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, சுன்னாகம் பிரதேசத்திலுள்ள குடிதண்ணீரில் கழிவு ஒயில் இல்லை என்று அறிக்கை வெளியிட்டது. இதன் காரணமாக இடர் முகாமைத்துவ அமைச்சு நிதியை நிறுத்தியது என்ற விடயம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் ஜெகதீஸ்வரனால் தெரிவிக்கப்பட்டது.

"நிபுணர் குழுவை யார் நியமித்தது? அவர்கள் எங்கு ஆய்வு செய்தார்கள்?" என்ற கேள்வியை ஆளுநர் சாள்ஸ் எழுப்பினார்.

"வடக்கு மாகாண விவசாய மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சால் அந்தக் குழு மாகாண சபையின் ஒப்புதலுடன் நியமிக்கப்பட்டது. ஆய்வு அறிக்கையை வடக்கு மாகாணத்தின் அப்போதைய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் ஒப்படைத்தனர்" என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் பதிலளித்தார்.

"வடக்கு மாகாண சுற்றுச் சூழல் அமைச்சுக்கும் குடிதண்ணீருக்கும் என்ன சம்பந்தம்? எப்படி நிபுணர் குழுவை நியமித்து அவர்கள் ஆய்வு நடத்தலாம்?"என்று ஆளுநர் சாள்ஸ் கேள்வி எழுப்பினார்.

2014ஆம் ஆண்டு வடக்கு மாகாணசபையில் குடிதண்ணீர் ஆய்வு தொடர்பான தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது சபையின் உறுப்பினராக இருந்த அங்கஜன் இராமநாதன் மற்றும் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் ஆளுநர் இந்தக் கேள்வியை எழுப்பியபோது அவருக்குப் பதிலளிக்காது அமைதியாக இருந்தனர்.

இதேவேளை 2014ஆம் ஆண்டு குடாநாட்டின் நிலத்தடி நீர்ப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கான குழுவை நியமிக்க வடக்கு மாகாணசபை ஒப்புதல் வழங்கியது. வடக்கு மாகாண அமைச்சரவையும் அனுமதி வழங்கியது. இதற்குரிய நிதி விடுவிப்புக்கு அப்போதைய ஆளுநராக இருந்த மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் அனுமதித்திருந்தார்.

(ஒ.ப.5)

# கிடைத்த நிதிகளில் முளைத்த கட்டடங்கள்

***பராமரிப்பற்று இருக்கின்றன என ஆளுநர் வேதனை***

யாழ்ப்பாணம், பெப். 4

வடக்கு மாகாணத்துக்கு கடந்த காலங்களில் கிடைத்த நிதிகளில் பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் அவை எந்தப் பயனும் இல்லாமல் வெறும் கட்டடங்களாகவே இருக்கின்றன. இவ்வாறு ஏராளமான கட்டடங்கள் இருக்கின்றன. அவற்றை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் தெரிவித்தார்.

நான் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மாவட்டச் செயலராகச் செல்லும்போது அங்கு இருந்த பாவனையற்ற அரச கட்டடங்கள் தொடர்பான விவரங்களை கணக்காய்வுத் திணைக்களத்தின் ஊடாகப் பெற்றேன். சுமார் 700 கட்டடங்கள் அவ்வாறு இருந்தன. அரச நிதிகள் கிடைக்கின்றன என்பதற்காக பயனற்ற கட்டடங்களை அமைப்பதால் நன்மையில்லை.

வடக்கில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல மில்லியன் ரூபாக்களில் அரிசி ஆலைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. ஆனால் அவை எவையும் இயங்கவில்லை.

மீளக் குடியமர்ந்தோருக்கு வழங்கப்பட்ட வீடுகளில், வவுனியா மாவட்டத்தில் 700 வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 900 வீடுகளும் ஆள்கள் வசிக்காத நிலையில் இருக்கின்றன. உரிய பயனாளிகள் தெரிவு செய்யப்படவில்லை என்பதே இதன் அர்த்தம். பிரதேச செயலர்கள் பயனாளிகளைத் தெரிவுசெய்கின்றபோது கவனமாக ஆராய்ந்து தகுதியான பயனாளிகளைத் தெரிவு செய்யவேண்டும், என்றார். (ஒ.ப,5)

# சாதனை அமர்வு

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை 8 மணி நேரம் தொடர்ச்சியாக இடம்பெற்றது. மதிய போசனத்துக்காகவும் இந்தக் கூட்டத்தில் இடைநிறுத்தப்படாமல் தொடர்ச்சியாக இடம்பெற்று சாதனை படைத்துள்ளது. இதற்கு முன்னர் இவ்வாறு நீண்ட நேரம் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றதில்லை.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஓராண்டின் பின்னர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் ஆகியோர் தலைமையில், மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.40 மணிக்கு கூட்டம் நிறைவடைந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் [illegible] கலந்து கொள்ளவில்லை. (ஒ.ப,5,319)

# குடாநாட்டில் 90வீத மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் கிடைக்காது!

## ஆளுநர் கவலை

யாழ்ப்பாணம், பெப். 4

குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை குடாநாட்டில் நடைமுறைப்படுத்தினாலும் 90 சதவீதமான மக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீர் கிடைக்காது என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது நீர் விநியோகம் தொடர்பான விடயங்கள் ஆராயப்படுகையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டது.

"தாளையடியிலிருந்து கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தின் ஊடாக பெறப்படும் குடிதண்ணீரே குடாநாட்டில் விநியோகிக்கப்படவுள்ளது. 2023ஆம் ஆண்டளவில் இது நடைமுறைக்கு வரும்" என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வட பிராந்திய முகாமையாளர் தி.பாரதிதாசன் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், அந்தத் திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டாலும் குடாநாட்டில் 10 சதவீதமான மக்களுக்குத்தான் சுத்தமான குடிதண்ணீர் கிடைக்கும். 90 சதவீதமான மக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீர் [illegible] பெற்றுக்கொடுப்பதற்குரிய வழிவகைகளை ஆராயவேண்டும், என்றார். (ஒ.ப,5)

# அலுவலரின் பிள்ளைக்காகவே குமுதினியைக் கொண்டுசென்றோம்

## வீதி அபிவிருத்தி அதிகார சபை தன்னிலை விளக்கம்

**யாழ்ப்பாணம், பெப். 4**

**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலர் ஒருவரின் தந்தைக்கு உடல் நிலை சரியில்லை. அலுவலரின் பெண் பிள்ளை தனியே இருந்தமையால், நெடுந்தீவுக் கூட்டத்துக்கு வந்த அலுவலர் பதற்றப்பட்டார். அதனாலேயே குமுதினி படகைக்கொண்டு சென்றோம். இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட பொறியியலாளர் வி.சுதாகர் விளக்கமளித்தார்.**

நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. கூட்டத்தில் பங்கு கொண்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் குமுதினிப் படகை பி.ப. 2 மணியளவில் நெடுந்தீவு இறங்குதுறையிலிருந்து எடுத்து வந்துள்ளனர். இதனால் கூட்டத்தில் பங்குபற்றியவர்கள் உள்பட அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் 150 பேர் வரையில் நெடுந்தீவில் காத்திருந்தனர். 3 மணிக்குச் செல்ல வேண்டிய குமுதினிப் படகை அந்த நேரத்துக்கு முன்னதாகவே எடுத்துச் சென்றமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைத்தார்.

இணைத் தலைவர்கள், இந்த விடயம் தொடர்பில் விளக்கமளிக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளரிடம் கேட்டார்கள். அதற்குப் பதிலளித்த அவர், அந்தச் சம்பவத்துடன் தனக்குத் தொடர்பில்லை என்றும் கூட்டத்தில் பங்குபற்றிய யாழ்ப்பாண மாவட்ட பொறியியலாளர் பதிலளிப்பார் என்றும் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் பதிலளித்த பொறியியலாளர், நெடுந்தீவு கூட்டத்தில் பங்குபற்றிய அலுவலர் ஒருவரின் தந்தைக்குத் திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டது. அலுவலரின் பெண் பிள்ளை தனியே இருந்தமையால், உடனே செல்லவேண்டிய தேவை ஏற்பட்டது. அவர் படகை வாடகைக்கு அமர்த்திச் செல்லவே விரும்பினார். அது சாத்தியப்படாமல் போக பிரதேச சபைத் தவிசாளரின் அனுமதியுடன் குமுதினிப் படகை எடுத்துச் செல்ல வேண்டி ஏற்பட்டது. நாம் புறப்பட்டுச் செல்லும்போது கடலில் மோசமான வானிலை இருக்கவில்லை. இதனால் குமுதினிப் படகு எம்மை இறக்கிவிட்டு திரும்பிச் செல்லும் என்று நாம் நினைத்தோம், என்று விளக்கமளித்தார். (ஒ.ப.5,319)

---

கஞ்சா, சட்டவிரோத மணல் அகழ்வு

# தகவல் வழங்கி வந்தவர் பொய்க் குற்றச்சாட்டில் கைது

## பொலிஸாரை எப்படி நம்புவது என்று கஜேந்திரன் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், பெப். 4

**கஞ்சாக் கடத்தல், சட்டவிரோத மணல் அகழ்வு என்பவை தொடர்பில் பொலிஸாருக்குத் தொடர்ச்சியாக தகவல் வழங்கி வந்தவர், தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயன்றார் என்ற பொய்க் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறான நிலையில் பொலிஸாரை எப்படி நம்புவது? இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.**

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த நபரொருவர் அந்தப் பகுதிகளில் இடம்பெறும் கஞ்சாக் கடத்தல் மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வு என்பவை தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கி வந்தார். நீண்ட காலம் அவர் தகவல் வழங்கி வந்துள்ளார். இந்த நிலையில் திடீரென, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

கஞ்சாக் கடத்தல் மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வு என்பனவற்றைத் தடுக்க முயற்சிப்பவர்கள் இந்தக் கைது நடவடிக்கையால் அச்சமடைந்துள்ளனர். நாம் பொலிஸாரை எப்படி நம்புவது? என்று அவர் கேள்வி எழுப்பினார். (ஒ.ப.5)

---

# 'நொதேர்ன் பவர்' இயங்கக்கூடாது

## இது மக்களின் முடிவு என்று கூறி தப்பிக்கிறார் அங்கஜன்

யாழ்ப்பாணம், பெப். 4

சுன்னாகம் பிரதேசத்தில் 'நொதேர்ன் பவர்' நிறுவனம் இயங்கக்கூடாது என்பது மக்களின் தீர்மானம் எனத் தெரிவித்து இணைத் தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் நழுவினார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வட பிராந்திய முகாமையாளர் தி.பாரதிதாசன், சுன்னாகம் பிரதேசத்திலிருந்து 12 கிணறுகளின் நீர் மாதிரிகள் சோதனைக்காக தரப்பட்டன. 6 மாதிரிகளில் கழிவு ஒயில் இருப்பது கண்டறியப்பட்டது என்று குறிப்பிட்டார்.

உடனே இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன், அப்படியானால் 'நொதேர்ன் பவர்' நிறுவனத்தை இயங்க அனுமதிக்க முடியாது தானே என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பாரதிதாசன், "நான் அதனைக் கூற முடியாது. இந்த விவகாரம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இருக்கின்றது. அதில் கூறப்பட்டவற்றைத்தான் பின்பற்ற முடியும்" என்று பதிலளித்தார்.

சுன்னாகம் பிரதேச கிணறுகளில் கழிவு ஒயில் கலந்தமை தொடர்பில் தொடரப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றம் கூறிய விடயங்களை 'நொதேர்ன் பவர்' நிறுவனம் செயற்படுத்தினால் அவர்கள் அந்தப் பிரதேசத்தில் தொடர்ந்து செயற்பட முடியும் என்று மாவட்டச் செயலக அதிகாரிகள் கூறினர். மேலும், கழிவு ஒயிலால் பாதிக்கப்பட்ட மக்கள் இழப்பீட்டைப் பெற்றால் அந்த நிறுவனம் தொடர்ந்து இயங்க முடியும். அந்த நிறுவனம் இயங்கக் கூடாது என்று நாம் தீர்மானம் நிறைவேற்ற முடியாது என்று மாவட்டச் செயலக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதன்போது பதிலளித்த இணைத் தலைவர்களுள் ஒருவரான இ.அங்கஜன், நாங்கள் அவ்வாறு கூறவில்லை. அந்தப் பகுதி மக்கள்தான் அவ்வாறு சொல்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். (ஒ.ப.5)

---

# மருதங்கேணி, காரைநகரில் பொலிஸ் நிலையங்கள்!!!

## விரைவில் அமையும் என்கிறார் எஸ்.எஸ்.பி. சேனாதீர

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ்ப்பாண மாவட்டத்தின் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவிலும் விரைவில் தனியான பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும் என்று காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீர தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரி சேவைகள் விடயதானத்தின் கீழ், பொலிஸ் திணைக்களம் தொடர்பில் ஆராயப்பட்டது.

மருதங்கேணி மற்றும் காரைநகர் பிரதேசங்களில் தனியான பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என்ற மக்களின் கோரிக்கை தெரியப்படுத்தப்பட்டது.

இதற்குப் பதிலளித்த சேனாதீர, இதற்குரிய நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் விரைவில் தனியான பொலிஸ் நிலையங்கள் அமையவுள்ளன எனவும் குறிப்பிட்டார். (ஒ.ப.5)

---

# 'தேவைகள் குறைந்ததால் சேவைகளைக் குறைத்தோம்'

## சுன்னாகம் குடிதண்ணீர் விநியோகம் தொடர்பில் முகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், பெப். 4

சுன்னாகம் பிரதேசத்தில் கழிவு ஒயிலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகத்தை நாம் முன்னெடுத்திருந்தோம். ஆனால் நாளடைவில் மக்கள் தங்கள் கிணற்று நீரையே பயன்படுத்தத் தொடங்கியதால் அவர்களுக்கு எங்களது குடிதண்ணீர் விநியோகம் தேவைப்படவில்லை. அதனால் நாம் அதனைக் குறைத்தோம். இவ்வாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் ஜெகதீஸ்வரன் விளக்கமளித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சுன்னாகம் பிரதேசத்தில் கழிவு ஒயிலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்தை சுன்னாகம் பிரதேச சபை மாத்திரமே மேற்கொள்கின்றது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தனது விநியோகத்தை நிறுத்தி விட்டது. நாம் இதற்காக சபை நிதியிலிருந்து 2 மில்லியன் ரூபா செலவு செய்கின்றோம். எமக்கு நிதி தேவைப்படுகிறது என்று சுன்னாகம் பிரதேச சபைத் தவிசாளர் தர்சன் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த பிராந்திய முகாமையாளர் ஜெகதீஸ்வரன், "ஆரம்பத்தில் இடர்முகாமைத்துவ அமைச்சு இதற்குரிய நிதியை வழங்கியது. வடக்கு மாகாண சபை அமைத்த நிபுணர் குழு, அந்தப் பகுதி குடிதண்ணீரில் கழிவு ஒயில் இல்லை என்று கூறியமையால், காலப்போக்கில் அந்த நிதி நிறுத்தப்பட்டது. ஆனாலும் எமது திணைக்களத்தின் நிதியில் இதனைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம்.

2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் அதிகளவான மக்கள் எம்மால் விநியோகிக்கப்பட்ட குடிதண்ணீரையே பயன்படுத்தினர். காலப்போக்கில் அவர்கள் தங்கள் கிணற்று நீரைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். இதனால் எமது விநியோகத்தை மட்டுப்படுத்திக் கொண்டோம். நாம் நிறுத்தவில்லை" என்று கூறினார். (ஒ.ப.5)

# வல்லரசுகளின் மோதல்களமாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.4

வெளிவிவகாரக் கொள்கையைத் தவறாகக் கையாண்டதன் காரணமாக அரசு இலங்கையை வல்லரசுகளின் மோதல்களமாக மாற்றியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; இலங்கையை இதுவரை ஆண்ட 11 தலைவர்கள் சமநிலை தவறாத வெளிவிவகாரக் கொள்கையைப் பின்பற்றி னார்கள். ஆனால் முன்னைய மஹிந்த ராஜ பக்ச அரசும், தற்போதைய அரசும் சீனாவுக்கு பெருமளவு இடத்தை வழங்கியதன் மூலம் அந்த வெளிவிவகாரக் கொள் கையை பக்கச்சார்பானதாக ஆக்கின. இந்த அரசும் முன்னைய அரசும் சீனாவிடமி ருந்து அதி களவு கடன்களைப் பெற்றதன் காரணமாக சீனா இலங்கை விவகாரத்தில் பெருமளவு தலையீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது இலங்கையை வல்லரசுகளின் மோதல் களமாக மாற்றியுள்ளன- என்றார். (ப)



## பொதுநோக்கு மண்டபம் கையளிப்பு

மன்னார், பெப். 4

குஞ்சுக்குளம் மாதாகிராமம் பொது நோக்கு மண்டபம் உத்தியோக பூர்வமாக நானாட்டான் பிரதேச சபை தவிசாளரால் பொதுமக்களின் பாவனைக்காக, குஞ்சுக்குளம் மாதா கிராம சனசமூக நிலையத்திடம் கடந்த திங்கட்கிழமை கையளிக்கப் பட்டது.

குஞ்சுக்குளம் மாதா கிராம விளையாட்டு மைதானத்தில் 1978 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொதுமக்கள் பாவனைக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பொதுநோக்கு மண்டபம் இதுவரை உத்தியோக பூர்வமாக எந்த ஒரு அமைப்புக்கோ அல்லது திணைக்களத்துக்கோ வழங்கப்பட வில்லை. இவ்விடயத்தை நானாட்டான் பிரதேச சபை தவிசாளருக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து பிரிட்ஜின் லங்கா நிறுவனத்தின் அனுசரணையில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர், உடற்பயிற்சி நிலையம் மற்றும் இளைஞர்களுக்கான பொழுது போக்கு அம்சங்கள் போன்ற வற்றை உருவாக்கி கொடுப்பதற்கு பிரதேச சபை முன்வந்துள்ளது. (ய-213)

## தொழிற்சாலையில் தீ விபத்து

கொழும்பு, பெப்.4

கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் தீப் பரவியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் அமைந்துள்ள குப்பை மறுசுழற்சி தொழிற்சாலையில் நேற்று அதிகாலை 4.40 மணியளவில் இந்த தீ பரவல் ஏற்பட்டுள்ளது. எனினும் கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையம் ஆகியவற்றைச் சேர்ந்த தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்று தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ப)

## இலங்கை மீதான சர்வதேச தடைக்கு முஸ்லிம்கள் அழுத்தம் கொடுக்கக்கூடாது

### பைசர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு, பெப்.4

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை கட்டாயத் தகனத்துக்கு உட்படுத்துவதற்காக இலங்கைக்கு எதிராக தடைகளை விதிக்குமாறு முஸ்லிம்கள் வேண்டுகோள் விடுக்கக்கூடாது என்று முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா வேண்டுகோள் விடுத்துள்ளார் என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உடல்களைப் புதைப்பது முஸ்லிம்களின் அடிப்படை உரிமை. நான் நீதிமன்றத்தில் இதற்கு எதிராக அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தேன். அந்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 20மாதக் குழந்தையின் உடல் கட்டாயமாக தகனம் செய்யப்பட்டமைக்கு எதிராகவும் நான் மனுதாக்கல் செய்திருந்தேன். இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஆளும்கட்சி எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்றத்துக்கு வெளியே உள்ளவர்கள் இந்த விவகாரத்துக்கு தீர்வைக் காண முயல்கின்றனர். இதில் அரசியல் நோக்கம் உள்ளது என்று நான் கருதவில்லை. வெளிநாடுகளில் உள்ள முஸ்லிம்கள் எங்கள் உரிமைகளுக்கு குரல் கொடுக்கின்றனர். ஆனால் அவர்கள் இலங்கைக்கு எதிராக சர்வதேச தடைகளுக்கு வேண்டுகோள் விடுக்கக்கூடாது. சர்தேச அளவில் எங்கள் நாடு பாதிக்கப்பட்டால் முஸ்லிம்கள் பாதிக்கப்படுவார்கள். ஏனைய சமூகங்களுடனான எங்கள் உறவு பாதிக்கப்படும். எங்கள் உரிமைகளை பெறுவதற்காக அரசுக்கு சர்வதேச அளவில் அழுத்தங்களை கொடுக்கக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார் என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ப)

## செரமிக் உற்பத்திகளின் இறக்குமதித்தடை தளர்வு

கொழும்பு, பெப்.4

செரமிக் உற்பத்திகள் தொடர்பில் நிலவும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி புதிய வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றால் இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி துறைகளில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இதைக் கட்டுப்படுத்த இலங்கை பல்வேறு பொருள்களின் இறக்குமதி நடவடிக்கைகளைத் தற்காலிகமாக ரத்துச்செய்திருந்தது. அவற்றுள் செரமிக் உற்பத்திகளும் உள்ளடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)



கிளிநொச்சி மாவட்டத்தில் வளரக்கூடிய நெல்லினமா என பரீட்சிப்பதற்கு நடுகை செய்யப்பட்ட (BW 312) மூன்று மாதம் கொண்ட நெல்லினத்தின் அறுவடை வயல் விழா இரத்தினபுரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள மருதநகர் கிராமத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இரத்தினபுரம் விவசாயப் போதனாசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர், பரந்தன் விதை உற்பத்தி நிலையப் பொறுப்பதிகாரி, பரந்தன் விதை அத்தாட்சிப்படுத்தல் நிலையப் பொறுப்பதிகாரி, விவசாயத்திணைக்கள அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் உள்ளடப் பலரும் கலந்து கொண்டனர். (ய-113)



## சாக்கு சாமியாரின் பாதயாத்திரை இன்று

மன்னார், பெப்.4

சுதந்திர தினத்தை முன்னிட்டு மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பாதயாத்திரை ஒன்று சாக்கு சாமியார் என அழைக்கப்படும் கிறிஸ்தோப்பர் கிருஷ்ணன் டயஸ் என்பவரால் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் இன ஒற்றுமை வேண்டியும், கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கத் தம்மை அர்ப்பணித்துப் பணிபுரிவோருக்காகவும் இந்த யாத்திரை முன்னெடுக்கப்படவுள்ளது. மன்னார் மாவட்ட செயலகத்திலிருந்து இன்று காலை 10 மணியளவில் சர்வமதத் தலைவர்களின் ஆசியுடன் பாதயாத்திரையை சாக்கு சாமியார் ஆரம்பிக்கவுள்ளார். ஒருநாளைக்கு சராசரி 10 கிலோ மீற்றர் என்ற ரீதியில் 40 நாள்களுக்கு இவர் இந்த யாத்திரையை முன்னெடுக்கவுள்ளார். (வ-இ)

## பிள்ளையான், கருணாவை சந்தித்தார் இந்தியத் தூதர்

கொழும்பு, பெப்.4

இலங்கைக்கான இந்தியாவின் துணைத் தூதுவர் வினோத் கே.ஜேக்கப், பிள்ளையான் மற்றும் கருணா ஆகியோர் தலைமையிலான குழுக்களை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமாக அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை ஏற்படுத்துவதன் ஊடாகவே தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய முடியும் என்ற இந்தியாவின் நீண்டகால நிலைப்பாட்டை இந்தியாவின் துணைத்தூதுவர் வினோத் கே. ஜேக்கப், குறித்த குழுவினருக்கு இந்தச் சந்திப்பில் மீள வலியுறுத்தினார் என்று அறியமுடிகின்றது. (ப)

### கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில்

# பாடசாலைகளுக்கு செல்லாமல் கலாசாரச் சீரழிவில் மாணவர்கள்

## இடைவிலகலும் அதிகரிப்பு என ஒருங்கிணைப்புக் குழுவில் சுட்டிக்காட்டல்

யாழ்ப்பாணம், பெப். 4

**கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்திலும் அதன் பின்னர் தற்போது வரையான காலங்களிலும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் கலாசாரச் சீரழிவில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.**

வலி. மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் சங்கானை பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே மேற்குறித்து சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த சிறப்புத் தேவையுடைய நபர் ஒருவர் மேலும் தெரிவித்ததாவது:

சங்கானை பிரதேச செயலக ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளிலும் சரி, ஏனைய பகுதிகளிலும் சரி மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீதிகளிலும் மக்கள் நடமாட்டம் அற்ற பகுதிகளிலும் கலாசாரச் சீரழிவில் ஈடுபடுகின்றனர். மாணவர்கள் கற்றலை நிறுத்திக்கொண்டு இடைவிலகும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன. இதற்கு என்ன தீர்வு?. இவ்வாறானவர்களை மக்கள் கண்டால் என்ன செய்வது? என்பதை இந்தக் கூட்டத்தில் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் -என்றார்.

இதற்குப் பதில் வழங்கிய மேலதிக மாவட்டச் செயலர் பிரதீபன், கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் பாடசாலைகள் இயங்கவில்லை. எனவே நீங்கள் சொல்வது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். ஆனால் தற்போது பாடசாலைகள் வழமைபோன்று இயங்க ஆரம்பித்துவிட்டன. உரிய கண்காணிப்புக்கள் மற்றும் நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் எடுக்கப்படும் - என்றார். (ம-319)

# ஜெனிவா அமர்வைக் காட்டி ஏமாற்றப்படும் தமிழர்

## ஆனந்தசங்கரி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 4

இந்த வருட ஜெனிவா அமர்வில் ஒரு தீர்க்கமான முடிவு மேற்கொள்ளப்படும் என தமிழ் மக்களுக்கு பொய்யான நம்பிக்கையை ஊட்டி, உணர்ச்சிகரமான வசனங்களைப் பேச தமிழ் தலைமைகள் ஆரம்பித்துவிட்டனர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

கடந்த பத்து வருடங்களாக ஜெனிவாவுக்கு காவடி எடுத்து கண்ட நன்மைகள் என்ன? ஏதாவது ஒரு துரும்பையாவது அசைக்க முடிந்ததா? இறுதிப் போரை தானே நடத்தி முடித்தேன் என்று, பகிரங்கமாக அறிவித்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் கடந்த நல்லாட்சி அரசில் 5 வருடங்களாக கூடிக் குலாவிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், உண்மைத் தன்மையை ஏன் மக்களுக்கு வெளிப்படுத்தவில்லை. அந்த ஐந்து வருடங்களில் இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் சரணடைந்த போராளிகளுக்கும், வெள்ளைக் கொடியுடன் வந்தவர்களுக்கும் என்ன நடந்தது என்று, சரத் பொன்சேகாவைக் கேட்டிருந்தால் தெள்ளத்தெளிவாக விவரங்களைக் கூறியிருப்பார். அந்தக் காலகட்டத்தில் நடந்த ஜெனிவா அமர்வில் அவற்றை எடுத்துக் கூறி, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கையையும் எடுத்திருக்கலாம். இதனை ஏன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்யவில்லை. ஜெனிவாவுக்கு வருடா வருடம் காவடி தூக்கும் நிகழ்வாக இதைத் அடுத்த கட்டத்தை நோக்கி நகர வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவர்களால் ஜெனிவாவுக்குப் போய் நீதிகேட்க முடியாது . மனித உரிமை மீறல்கள் பற்றி எவரிடமும் பேச முடியாது - என்றுள்ளது. (ப)

## சுகாதார பரிசோதகரின் சேவைக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம்,பெப்.4

திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திருவாஞ்சீஸ்வரன் கிருபனின் சேவையைப் பாராட்டி மக்களால் கௌரவிக்கப்பட்டார்.



திருநெல்வேலி மேற்கு கிராம அலுவலக வளாகத்தில், பிரிவு மக்கள் சார்பில் அவர் கௌரவிக்கப்பட்டார்.

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொவிட் - 19 தடுப்பு தனிமைப்படுத்தல் நடவடிக்கை, விழிப்புணர்வு மற்றும் களப்பணியில் (யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சூழல், திருநெல்வேலி பொதுச் சந்தை) இரவு, பகல் பாராது சேவையாற்றி, தொடர்ந்தும் சேவையாற்றி வருகின்றமைக்காக அவருக்கு விருது வழங்கப்பட்டது.

திருநெல்வேலி மேற்கு கிராம அக்னி இளைஞர் அணி மற்றும் முத்துமாரியம்மன் மூத்த பிரஜைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த விருது வழங்கப்பட்டது. (க-இ)

## தந்தை செல்வா நினைவு தினத்தை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.4

தந்தை செல்வா நினைவு தினத்தை முன்னிட்டு செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையால் பொதுமக்களிடையே கட்டுரை மற்றும் விவாதப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அவ்வகையில் கட்டுரைகளை அனுப்பும் போட்டியாளர்கள் 'அரசியலில் பெண்களை உள்வாங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட இட ஒதுக்கீட்டின் சாதக, பாதகங்களை ஆராய்க' மற்றும் இன்றைய அரசியல் கலாசாரத்தால் அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்வது எப்படி?' என்ற தலைப்புகளில் விரும்பியதொரு தலைப்பைத் தெரிவு செய்து 400 முதல் 500 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்புதல் வேண்டும்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் சமூக மட்ட அமைப்புக்களிடையே விவாதப் போட்டி நடத்தப்படவுள்ளது. இவ் அமைப்புக்கள் பதிவு செய்யப்பட்டவையாகவோ அல்லது பதிவு செய்யப்படாத குழுக்களாகவோ இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் தங்கள் முழுப்பெயரை தமிழிலும் ஆங்கிலத்திலும் தெளிவாக எழுதி 'தந்தை செல்வா கலையரங்கம், இல. 114 இராஜேந்திர பிரசாத் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு செல்வ நாயகம் நினைவு அறக்கட்டளை அறங்காவலர் ச.இளங்கோவன் அறிவித்துள்ளார். (ச-இ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கொடிகாமம், பெப்.4

தென்மராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த மாதம் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் தலைவர் மா.மதிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி நகராட்சி மன்ற உபதவிசாளர் அ.பாலமயூரன், யாழ். பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் நிறுவனங்களின் இணையத் தலைவர் பொ.கெங்காதரன் மற்றும் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர் .

தலைவராக மா.மதிவண்ணன் உபதலைவராக இ.தவேந்திரன், செயலாளராக வி.அற்புதநேசன், உப செயலாளராக அ.ஜெபராஜ், பொருளாளராக சி.தவானந்தம் மற்றும் உறுப்பினர்களாக பா.கிருஷ்ணபிள்ளை , வ.கஜேந்திரன், சி.உதயகுமார் ஞா.ஜெசோதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ச-159)

## யாழ்.மத்திய கல்லூரி மாணவர் விடுதி மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பாடசாலை மாணவர் விடுதி மீளவும் எதிர்வரும் 11ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. ஏற்கனவே விடுதியில் தங்கி கல்வி கற்ற மாணவர்கள் மீளவும் இணைந்து கொள்ளலாம். விடுதியில் தங்கி கல்வி கற்க விரும்பும் ஏனைய மாணவர்களுக்கும் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த வருடம் தரம் 8 இல் கல்வி கற்கும் விளையாட்டுத் திறன் கொண்ட மாணவர்களுக்கு இலவச விடுதி வசதிகளோடு பல சலுகைகளும் வழங்கப்படவுள்ளன என பாடசாலை அதிபரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அபயம் மருத்துவ நிலையத்தில் இலவச மருத்துவ சேவை

ஆனைக்கோட்டை, கூழாவடியில் அமைந்துள்ள அபயம் மருத்துவ நிலையத்தில் பெண் நோயியல் சிறப்பு சிகிச்சை நிபுணரும், குழந்தைப் பேறு சிறப்பு சிகிச்சை நிபுணருமான வைத்திய கலாநிதி என். சரவணபவன் இலவசமாக வைத்திய ஆலோசனை வழங்கி வருகின்றார்.

சிகிச்சை பெற விரும்புவோர் தமது பதிவுகளை திங்கள், புதன், வெள்ளி, சனி ஆகிய நாள்களில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணி வரை மேற்கொள்ளலாம் எனவும், மேலதிக தகவல்களுக்கு 0212256005 அல்லது 0775850372 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# உறவுகளின் போராட்டத்துக்கு ஆசிரியர் சங்கம் முழு ஆதரவு

**யாழ்ப்பாணம், பெப்.4**

**பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் தனது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளது.**



இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் உள்ளதாவது;

காணாமல் ஆக்கப்பட்ட பல நூறு உறவுகளின் குழந்தைகள் மற்றும் உறவினர்கள் படும் வேதனை சுமந்த வாழ்வுக்கு விடிவுவேண்டும் என பல நாள்களாக நடத்திவரும் போராட்டம் இன்று சகல பேதங்களுக்கும் அப்பால் மக்கள் ஜனநாயக எழுச்சிப் போராட்டமாக உருவெடுத்துள்ளது. முன்னைய ஆட்சிக்காலத்தில் அநாதைகளாக்கப்பட்ட பள்ளி செல்லும் பிள்ளைகளின் உறவுகளை விடுவிக்குமாறு ஐந்து லட்சத்துக்கும் அதிகமான கையொப்பங்களைப் பெற்று உரிய தரப்பிடம் கையளித்தோம். இன்று வரை அதற்குத் தீர்வு கிடைக்கவில்லை. மாறாக ஆக்கிரமிப்புகளும் அடக்கு முறைகளும் நீண்டு செல்கின்றன. இதற்குத் தீர்வு வேண்டி இன்று இப் போராட்டம் மக்கள் எழுச்சிப்போராட்டமாக உருவெடுத்துள்ளது. இத்தகைய போராட்டத்துக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் தமது முழு ஆதரவைவழங்கி நிற்கின்றது.

பிரிக்கப்படாத தொப்புள் உறவோடு வாழும் எம் இனத்தின் துயர வாழ்வுக்கு நீதி கிடைத்து எதிர்காலச் சந்ததியாவது நிம்மதியாக வாழ்வதற்கு வழியேற்படவேண்டும். என்பதற்காக ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகமும் பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றுள்ளது (ப-4)

## ஆங்கில டிப்ளோமாதாரிகளுக்கு போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.4

ஆரம்பக் கல்வி (ஆங்கிலம்) ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்கு ஆங்கில டிப்ளோமாதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் செயலாளர், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, வட மாகாணம், இல. 393/8. கோவில் வீதி நல்லூர் யாழ்ப்பாணம் எனும் முகவரியுடனோ அல்லது 0212219939 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று மாகாணப் பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலர் தெரிவித்துள்ளார். (ப)

## மன்னார் வங்கி அலுவலர் உட்பட ஐவருக்கு வடக்கில் கொரோனா

வடக்கு மாகாணத்தில் மேலும் 5 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றுக் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் மன்னார் சம்பத் வங்கியில் பணியாற்றும் மாத்தறையைச் சேர்ந்த அலுவலர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 667 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதன்போதே ஐவருக்கு தொற்றுள்ளமை தெரியவந்தது.

இந்த நிலையில் சம்பத் வங்கியின் மன்னார் கிளை மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் மாத்தளையில் இருந்து வருகை தந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஆடைத் தொழிற்சாலை சாரதி ஒருவருக்கு கொரோனா உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-26)

## இராணுவமே சூடு நடத்தியது !

### துப்பாக்கி சூட்டில் காயமடைந்த வவுனியா இளைஞர்கள் தெரிவிப்பு

வவுனியா,பெப்.4

வவுனியா செட்டிக்குளம் பேராறு காட்டுப் பகுதியில் இளைஞர்கள் மீது இராணுவத்தினரே துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர் என்று துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருடன் சென்ற மற்றுமொருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

இளைஞர்கள், இராணுவத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாலேயே அவர்கள்மீது இராணுவத்தினர் திருப்பி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்திருந்தது. இந்தக் கருத்தை மறுத்த பாதிக்கப்பட்ட இளைஞர்கள் தாம் துப்பாக்கிகள் எதனையும் வைத்திருக்கவில்லை என்றும், பேராறு காட்டுப்பகுதியில் மறைந்திருந்த இராணுவத்தினரே தம்மீது துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டனர் என்றும் தெரிவித்தனர்.

"மரங்களை அறுப்பதற்காகவே காட்டுக்குச் சென்றோம். வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது இராணுவமே திடீர் என்று எங்கள் மீது தாக்குதல் நடத்தியது" என்று அந்த இளைஞர்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் செட்டிக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ப-110)

## வினாத்தாள்கள் கையளிப்பு



மன்னார், பெப். 4

தற்போது மன்னார் கல்வி வலயத்தில் நடைபெற்றுவரும் சாதாரண தரப் பரீட்சைகளுக்கான மாதிரி வினாத்தாள்களின் ஒரு தொகுதி, மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் நிதி அனுசரணையில், இந்த மாதிரி வினாத்தாள்கள் மன்னார் கல்விப் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டன. (ற-56)



பேராசிரியர்களாகப் பதவி உயர்வுபெற்ற பேராசிரியர் ரவிராஜ், பேராசிரியர் கீதாஞ்சலி சத்தியதாஸ் மற்றும் பேராசிரியர் குமணன் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு வடமாகாண மருத்துவர் மன்றத்தின் ஏற்பாட்டில் வலம்புரி நட்சத்திர விடுதியில் அண்மையில் இடம்பெற்றது. (க-இ)

## மரண அறிவித்தல்

### சுந்தரராசா சீவரத்தினம் (சந்திரன்)



நெடுந்தீவை பிறப்பிடமாகவும் இல.91/1, சிவநகர், உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரராசா சீவரத்தினம் (சந்திரன்) அவர்கள் நேற்று (03.02.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரராசா நாகமுத்து தம்பதியரின் புதல்வரும், திருமதி. கீதபொன்கலன், நாகம்மா, திருமதி ஏகாம்பரம், கனகரத்தினம் ஆகியோரின் பெறாமகனும், பழனி, யோகாம்பிகை தம்பதியரின் மருமகனும், நீலாம்பாள் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சாருகா, பிரியங்கா, ஜதார்த்தன், திவ்வியா ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதி, இராசரத்தினம் (லயன்ஸ் கழகம் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமலிங்கம், நடராசலிங்கம், தனலட்சுமி (நெடுந்தீவு), திவ்வியலட்சுமி (முழங்காவில்), புஸ்பலட்சுமி (கொலண்ட்), யோகலட்சுமி (இராமநாதபுரம்), புஸ்பவதி (உதயநகர்), சண்முகம் (உருத்திரபுரம்) ஆகியோரின் மைத்துனரும் செந்தில்நாயகி, கலைமகள், பரராசசிங்கம், ஆனந்தராசா, நகுலேஸ்வரன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உருத்திரபுரம் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.91/1, சிவநகர், உருத்திரபுரம்.**
**தொ.பே.இல:**
0769410566, 0772881005

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 09 . 1953



மறைவு 03 . 02 . 2021

## வேலு கதிரேசன்

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலு கதிரேசன் நேற்று (03.02.2021) காலமானார்.

அன்னார் வேலு-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், பாக்கியத்தின் பாசமிகு கணவரும், முரளிதரன் (கட்டார்), சுவர்ணா (ஆசிரியை, யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை), சுதர்சனா (சிலிங்கோ லைப் - அச்சுவேலி கிளை), சஜிதரன், பிரியதர்சனா (ஆசிரியை, முழுங்காவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசல்யா, யேசுரத்தினம் (ஆசிரியைர் - சண்டிலிப்பாய் அ.த.க. பாடசாலை), சிவகுமார் (றூமேனியா), ஜனனி, ஹேமச்சந்திரன் (ஆசிரியர், தி.நிலாவெளி கைலேஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், யசிந்தா, சிவகேமா, யதுஷன், கிருஷாலினி, நிருஷாமினி, சக்ஷிகா, கெமில்சன், அருதக்ஷியா, சர்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2021) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் நீர்வேலி கந்தசாமி கோயிலடி நீர்வேலி தெற்கு என்னும் முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயாதனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
077 111 0810
077 482 0599
077 856 3366

**கந்தசாமி கோயிலடி,**
**நீர்வேலி தெற்கு,**
**நீர்வேலி**

## காணாமல் ஆக்கப்பட்டோருக்காக நேற்றும் தொடர்ந்தது கவனவீர்ப்பு


கிளிநொச்சி, பெப். 4

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாக தொடர்ந்தது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் இரண்டாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது. சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கறுப்புத் துணிகளால் முகத்தை மறைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-6)

# மரண அறிவித்தல்

மலர்வு 16 . 07 . 1959



உதிர்வு 30 . 01 . 2021

## பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம் (அப்பன்- சுவிஸ்)

யாழ்ப்பாணம் நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் சுவிஸ் Grenchen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம் அவர்கள் 30.01.2021 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா அம்மாபிள்ளை தம்பதியரின் மருமகனும், நித்தியகலா (நித்தி) அவர்களின் அன்புக் கணவரும், கிரிதாஷ், றஜிதா, காலஞ்சென்ற ஜீர்த்தா அவர்களின் பாசமிகு தந்தையும், கணேஸ்கண்ணா, சிவசங்கரி, தனுஷியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அவிஷா, நித்தியா, அகிஷா, அஜய், ஆகிஷா, ரோஹித், ஹனித்தா, மேகா ஆகியோரின் பாசமிகு பேரனும், இராஜேஸ்வரி, கமலநாயகி, செல்வராஜா (துரை கராஜ்), கோணேஸ்வரி (நீர்வேலி), தனபாலசிங்கம் (கிளி- கனடா), இராசேந்திரம் (ராசா- கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2021) வியாழக்கிழமை Friedhot Cemetery in Biel Swiss இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : பொ.செல்வராசா**
**'துரை கராஜ்'**
**077 625 7948**

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் பிள்ளையம்மா



இல.70 (100) பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம்பிள்ளையம்மா நேற்று (03.02.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சுப்பிரமணியம் (மெக்கானிக்) அவர்களின் அன்பு மனைவியும், நீதிராசா (ஆசிரியர்), சிறிஸ்காந்தராசா, சுசிலா (கனடா), ஜெய ராசா, விஜயராசா, மாலினி, காமினி (பிரதேச செயலகம்- வேலணை) ஆகியோரின் தாயும், சாந்தலிங்கம் (கனடா), ஜெயராசா, ஜெயாலினி, பத்மாவதி, சுபோதினி, கலைவாணி, ஜனனி (பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும், டினோஷன், தனுஷன், தனுஜா, நீதிகா, நீரூஷன், டிரூஜன், பர்மிளா, கஜானன், நாவேந்தன், றட்சிதன், ஹேசியன், மிகாரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.70(100),**
**பருத்தித்துறை வீதி,**
**ஆரியகுளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மகன்- சிறிஸ்கந்தராசா**
**0777 110 119**
**விஜயராசா - மகன்**
**சந்நதி முருகன் வேக்சொப் அன் சேவிஸ்**
**077 201 8275,**

# மரண அறிவித்தல்



பிறப்பு
19 . 11 . 1937

இறப்பு
02 . 02 . 2021

## சண்முகம் பாலசிங்கம்

பொன்னாவளியை பிறப்பிடமாகவும் பூநகரி, குமுழமுனை, முழங்காவில் ஆகிய இடங்களை வதிவிடமாக கொண்ட குமுழமுனை முத்துமாரி அம்மன் ஆலய பூசகர் சண்முகம் பாலசிங்கம் அவர்கள் 02.02.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ் சென்றவர்களான கந்தையா மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியம் அவர்களின் பாசமிகு கணவரும், சிவகாமவல்லி, ஏகாம்பரம், கனகாம்பிகை, காலஞ் சென்றவர்களான அமிர்த லிங்கம், தர்மலிங்கம், மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பேரின்பநாதன் (நோர்வே), தேவராணி (லண்டன்), கதிர்காமநாதன் (லண்டன்), தணிகாசலநாதன் (லண்டன்), கமலராணி (மன்னார்), சசிகலாராணி (லண்டன்), பேபிராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நடராஜா, சிவபாக்கியம், வேலுப்பிள்ளை மற்றும் நாகேஸ்வரி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும், புஸ்பராணி (நோர்வே), சுதாரஞ்சினி (லண்டன்), ஸ்றெனிஜா (லண்டன்), சங்கர் (மன்னார்), சிவகுமார் (பிரான்ஸ்), ரமேஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விஜித்தா, தீபன், டிசாந்தன், அனுஷன், திஷாந்தினி, ஜெனார்த்தனன், அபிநயன், அஞ்ஷஜன், அரணிஜா, ஷம்மியா, பிருத்தியா, சரணியா, தனுஷன், சிலக்ஷன், கபிஷன், ஷஜின் ஆகியோரின் அன்புப் பேரனும், அர்ஸினியின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2021) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் முழங்காவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் குமுழமுனை பல்லவராயன்கட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவலர் வீதி, முழங்காவில்.**
**0777066422, 0773998627**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கொவெக்ஸ் சலுகையில் 40 இலட்சம் தடுப்பூசிகள்

கொழும்பு, பெப்.4

கொவெக்ஸ் சலுகையின் கீழ் 40 இலட்சம் கொரோனாத் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

இதன் கீழ் அஸ்ட்ராஜெனகா கொவிஸீல்ட் தடுப்பு மருந்துகள் இலவசமாக கிடைக்கபெறவுள்ளன என உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தென்கிழக்காசிய வலயத்துக்கான பிரதிநிதி, விசேட மருத்துவ நிபுணர் பாலித்த அபேகோன் தெரிவித்துள்ளார்.

இதில் முதல் கட்டமாக 30 வீத தடுப்பூசிகள் இம்மாத இறுதிக்குள் கிடைக்கவுள்ளன. எனவும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## ஐக்கிய மக்கள் கூட்டணி அதிகாரபூர்வமாக ஸ்தாபிப்பு

### சஜித்-மனோ சந்திப்பில் முடிவு




கொழும்பு, பெப்.4

ஐக்கிய மக்கள் சக்தியை மையப்படுத்தி அமைக்கப்படும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற புதிய அரசியல் கூட்டமைப்பின் யாப்பு இம்மாத இறுதிக்குள் இறுதி செய்யப்பட்டு, அதிகாரபூர்வமாக அந்தக் கூட்டமைப்பு ஸ்தாபிக்கப்படவுள்ளது. இது தொடர்பில் எதிர்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோருக்கு இடையில் கொழும்பு எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இக் கூட்டமைப்பில் முதல் பங்காளிக் கட்சியாக தமிழ் முற்போக்கு கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் கைகோர்க்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஐக்கிய மக்கள் கூட்டணியின் உத்தேச யாப்பு, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள், கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களை ஐக்கிய மக்கள் கூட்டணி கைப்பற்றுவது தொடர்பான வியூகம், மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பான வியூகம், நாட்டின் இன்றைய அரசியல் நிலவரம் ஆகியவை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன. (வ-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 ❀ 11 ❀ 1966



இறப்பு 03 ❀ 02 ❀ 2021

### நாகலிங்கம் கிருபாகரன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கிருபாகரன் அவர்கள் நேற்று (03.02.2021) புதன்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - விஜயலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், சிதம்பரப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சிதம்பரேஸ்வரியின் அன்பு கணவரும், கிருஷாந்தினி, நிருசன், நிருசா, நிருபா, சஜீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், கபில்ராஜ், திலைக்ஷனா ஆகியோரின் அன்பு மாமனாரும், புனிதவதி, நகுலேஸ்வரன், சுதாகரன், ஜெயராஜ், காலஞ்சென்ற ஜெயரூபி மற்றும் ஜெயராணி, ஜெயரூபன், ஜெயகௌரி, கோகிலவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமாரசாமி, யோகநாதன், பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராமநாதன், கேசவன் ஆகியோரின் அன்புச் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2021) வியாழக்கிழமை பி.ப. 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணாத்திப்பாலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 31 . 10 . 1970



மறைவு 30 . 01 . 2021

### இராசதுரை திருப்பதிவாசன்

30.01.2021 அன்று சுவிற்சர்லாந்தில் காலமான இராசதுரை திருப்பதிவாசன் அவர்களின் மறைவு செய்தி கேட்டு நாம் அதிர்ச்சி அடைந்துள்ளோம். அவர் மீண்டு வந்து எம்முடன் இணைவார் என நாம் காத்திருந்தோம். ஆனால் அவர் எம்மை ஏமாற்றி விட்டு இறைவனடி சேர்ந்து விட்டார். அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதோடு, அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துயர் பகிரும்
1986 (O/L) பிரிவு மாணவர்கள்
(அதிபர், ஆசிரியர், மாணவர்கள்)
ATC INSTITUTE - Inuvil

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 04 . 1927



மறைவு 03 . 02 . 2021

### நாகையா கண்மணி

முள்ளானை, இளவாலையைப் பிறப்பிடமாகவும், கந்தானை கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகையா - கண்மணி 03.02.2021 கந்தானை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - ஆசைப்பிள்ளை ஆகியோரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - மரகதம் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற நாகையா அவர்களின் ஆசை மனைவியும், சந்தனம் (கனடா), இரத்தினசிங்கம் (பண்ணாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மாவதி, துரைராஜா, காலஞ்சென்ற பற்குணராஜா மற்றும் விக்கினராஜா (சிவலிங்கம்) பத்மராணி, சிறீகாந்தா, ஜெயக்குமார், ஜெயந்திமாலா, வசந்தகுமார், காலஞ்சென்ற உருத்திரகுமார் மற்றும் யோகராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் ராஜகௌரி, றீட்டா, புஸ்பராணி, இராசலிங்கம், ரமணிகாந்தி, காலஞ்சென்ற நிர்மலாதேவி மற்றும் கணேசமூர்த்தி, வித்தியா, காலஞ்சென்ற குருபரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2021) வெள்ளிக்கிழமை 79/1, நீர்கொழும்பு வீதி, கந்தானையில் பி.ப 2.00 மணிக்கு நடைபெற்று, றியகுல, கந்தானை கப்புவத்தை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கந்தானை தொடர்புகளுக்கு:**
**சிறீகாந்தா-மகன் - 0773355997**
**பத்மராணி - மகள் - 077321 7584**

**தகவல்:**
**விக்கினராஜா (சிவலிங்கம்) மகன்**
**செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கு,**
**தொடர்பு இலக்கம்: 076 8919868**
**துரைராஜா - மகன் : 076 3276788**

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 09 . 1949



இறப்பு 03 . 02 . 2021

### திருமதி சத்தியதேவி சிவஞானசுந்தரம்

புலோலி தெற்கு, சாரையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சத்தியதேவி சிவஞானசுந்தரம் அவர்கள் நேற்று (03.02.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்) நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து (இளைப்பாறிய உப அதிபர்) சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவஞானசுந்தரம் (முன்னாள் இளைப்பாறிய கச்சேரி நில அளவையாளர்) அவர்களின் ஆருயிர் மனைவியும், கீதாஞ்சலி (கொழும்பு), மைதிலி (கனடா), அமுதா (இலண்டன்), ரமணன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மனோரஞ்சன் (கொழும்பு), நவநீதன் (கனடா), நிமலன் (இலண்டன்), பிரியஸ்தா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், இரங்கநாதன், சகுந்தலாதேவி, யோகநாதன் (அவுஸ்திரேலியா), திலகநாதன் (அமரர்), சாரதாதேவி, சிவநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராதாகிருஷ்ணன், பராசக்தி, சரவணபவன், சிற்சபேசன், விக்னேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற வீரபத்திரப்பிள்ளை மற்றும் பத்மாசனி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிருத்திகா, அத்மிகா, ஆதவன், சேயோன், சேந்தன், உமையா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.02.2021) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளிற்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொலைபேசி இலக்கம்**
**0212265596, 0771963827**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மூன்றாவது நாளில் முடிவுக்கு வந்தது தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 4

நிரந்தர நியமனம்கோரி, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக தொண்டர் ஆசிரியர்கள் நடத்திவந்த கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுப் பிற்பகல் 3 மணியுடன் முடிவுக்கு வந்தது.

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி, மூன்று நாள்களாக இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். ஆளுநருக்கு மனுவும் கையளித்திருந்தனர். இந்தநிலையில், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் நேற்று வழங்கிய உறுதிமொழியை அடுத்து இப் போராட்டம் முடிவுக்கு வந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (த-320)

## யாசகம் பெற்று வந்தவரின் சக்கர நாற்காலி திருட்டு

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் யாசகம் செய்பவர், ஆழ்ந்து உறங்கியபோது அவரது சக்கர நாற்காலி திருடப் பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். ஒற்றைக் காலை இழந்த ஒருவர் அந்தப் பகுதியில் சக்கர நாற்காலியில் இருந்தவாறு யாசகம் செய்துவந்தார். வழமைபோல் யாசகம் செய்துவிட்டு நேற்றுமுன்தினம் இரவு உறங்கியுள்ளார். நேற்றுக் காலையில் எழுந்து பார்த்தபோது தூங்கிய இடத்துக்கு அருகில் விட்டிருந்த சக்கர நாற்காலியைக் காணவில்லை. கடும் இடர்பாடுகளை எதிர்கொண்ட அவர், அந்தப்பகுதியில் நின்ற பொதுமக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (த-18)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF SCIENCE

Further to our advertisement dated 02.02.2021 for entertaining applications for the Academic Positions in the Faculty of Science, University of Jaffna.

Paragraph No.03 of the advertisement should read as follows:

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Unconfirmed) / Lecturer (Probationary)** in Chemistry/ Physics/ Fisheries/ Mathematics/ Statistics/ **Computer Science

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
03.02.2021

## கேள்வி விண்ணப்பம் கோரல்
### நோயாளர் பராமரிப்பு சேவை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கமானது வைத்தியசாலைக்கான நோயாளர் பராமரிப்பு சேவை(தனியார்) ஒன்றினை 01.03.2021 முதல் 31.12.2021 வரை குத்தகைக்கு நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இதற்கான கேள்வி விண்ணப்பம் கோரப்படுகிறது. இக்குத்தகைக்கான விண்ணப்பப்படிவங் களை மீளளிக்கப் படாத தொகை ரூபா 1000/= இனைச் செலுத்தி 04.02.2021 முதல் 14.02. 2021 காலை 09.00 மணிவரை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும். தனியாட்கள், குழுக்கள், சங்கங்கள் அல்லது நோயாளர் பராமரிப்பு சேவை நிறுவனங்கள் இதற்கு விண் ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் 14.02.2021 காலை 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். அன்றையதினமே (14.02.2021) காலை 11.00 மணிக்கு நடைபெறும் எமது நிர்வாகசபை கூட்டத்தில் இவ்விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்படும்.

**மேலதிக தொடர்புகளுக்கு: 0212263261, 0212263262**

Dr.V.கமலநாதன்
தலைவர் - நோயாளர் நலன்புரிச் சங்கம்.
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.

## உடனடி வேலைவாய்ப்பு

நிறுவனம் :- Tokyo Supermix Pvt Ltd
எழுதுமட்டுவாழ் தெற்கு மிருசுவில், யாழ்ப்பாணம்

வெற்றிடம் :- அலுவலக உதவியாளர்

தகைமை :- 1. A/L தகைமை
2. கணினி அறிவு
3. வயதெல்லை - 30 வயதிற்குட்பட்டவர்கள்
4. சாவகச்சேரி பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ;

**குறிப்பு** :- மேலே குறிப்பிடப்பட்ட வெற்றிடத்திற்கு தகுதியானவர்கள் கீழ் உள்ள முகவரிக்கு (08.02.2021-09.02.2021) திகதிகளில் சுயவிபரக்கோவையுடன் 9.00Am-3.00Pm வரையான கிழமை நாட்களில் நேரில் சமுகம் தரவும்.

**முகவரி :- டோக்கியோ ரெடிமிக்ஸ் பிளாண்ட் மிருசுவில், யாழ்ப்பாணம்.**

## இலங்கை மின்சாரசபை
## உத்துறு ஜனனி மின்னிலைய வளாகத்தினை சுத்திகரிப்புக்கான சேவை சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள்

இலங்கை மின்சாரசபை உத்துறு ஜனனி மின்னிலையத்திற்கு சுத்திகரிப்பு சேவைகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவம் மற்றும் விலைமனு ஆவணங்களை 23.02.2021 பி.ப 3.00 மணி வரை பிரதம பொறியியலாளர் அலுவலகம், உத்துறு ஜனனி மின்னிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம், என்னும் முகவரியில் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திர பெறுமதி (Price of the Bid Document) - ரூபா. 3,000.00
02. கேள்விப்பத்திர பிணை வைப்பு (Value of Bid Bond) - ரூபா. 45,000.00

கேள்விப்பத்திரங்கள் 24.02.2021. அன்று மு.ப 10.00 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகம், உத்துறு ஜனனி மின்னிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம், என்னும் முகவரியில் மனுதாரக்களின் அல்லது மனுதாரக்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், உத்துறு ஜனனி மின்னிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம், என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம், அல்லது மேற்படி அலுவலக முகவரியில் உள்ள விலை மனுப் பெட்டியில் (Tender Box) இல் நேரடியாக இடலாம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
உத்துறு ஜனனி மின்னிலையம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம், 40075.
தொலைபேசி இல. 0212242400 / 0212242247/48

## புதையல் தோண்டினரென முல்லையில் மூவர் கைது

முல்லைத்தீவு, பெப். 4

புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட மூவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

விசுவமடு மாணிக்கபுரம் பகுதியைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விசாரணையின் பின்னர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த19)

### மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி- 45ரூபாய்
தொடர்புகளுக்கு:- 077 334 1281

### வீடுகள் வாடகைக்கு

கிளிநொச்சியில் A 9 வீதியிலிருந்து 500 m தூரத்தில் விவேகானந்த நகரில் இரு வீடுகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:076 8604501, 0777111716

### வேலையாட்கள் தேவை

* வெதுப்பக வேலையாட்கள்
  * மேலைதேய உணவு தயாரிப்பாளர் (காலை, மாலை, இரவு)
* களஞ்சியப்படுத்துனர்கள்
* கணக்காளர் - ஆண் / பெண்

தொடர்பு: 0777 259245

### கீழ் வீடு வாடகைக்குண்டு

சென்.ஜோன்ஸ், சுண்டுக்குளி அருகாமையில் Old Park Road, (பழைய பூங்கா வீதி) கீழ் வீடு வாடகைக்கு உண்டு. (Car Paking உண்டு). வீடு முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்டுள்ளது.
தொடர்பு: 074 1978027

### வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் யூஸ் கடைக்கு யூஸ் வகைகளும் தேநீர் வகைகளும், போடத் தெரிந்த வேலையாட்கள் தேவை. சோடிஸ் வகைகள் போடத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது
தொடர்பு: 077 138 9631

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

நல்லின கழுத்து வெட்டி கோழிக் குஞ்சுகள் 1½ கிழமை மருந்து கொடுக்கப்பட்ட மற்றும் ஒருநாள் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. (உங்கள் இடங்களுக்குக் கொண்டுவந்து தரப்படும்)
076 205 3352

### தவறவிடப்பட்டுள்ளது

02.02.2021 அன்று பி.ப 12.50 மணி முல்லைத்தீவு-யாழ்ப்பாணம் பேருந்தில் பெறுமதியான நகைப்பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:
076 834 1669, 071 3760627

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 06 . 1942



மறைவு 03 . 02 . 2021

### ஆறுமுகம் செல்லம்மா

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் அரியாலை கிழக்கு அரியாலை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்லம்மா 03.02.2021 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி (வவுனியா), இராஜேஸ்வரி (கொழும்பு), அருள்ராஜா (வேலு சுப்பர் மார்கெட்-திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு தாயாரும், நகுலன், தர்சினி - சந்திரகுமார், கிருபாகரன், திவியா, மதுசன், கவிராஜ், சிவபவன், மனோச், தேனுஜன் ஆகியோரின் பேர்த்தியும், சிவதர்சன், அஸ்வின், ராகினி, விதுர்சன் ஆகியோரின் பூட்டியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2021) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் வீலகிளி இந்து மயானத்திற்கு (பலகாடு) எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரியாலை கிழக்கு, அரியாலை.**

**தகவல்: பிள்ளைகள் மகன்-அருள்)**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 07.01.2021 அன்று இயற்கை எய்திய எமது அன்னை

### சி.அன்புமலர்

அவர்களின் 31ம் நாள் நினை வேந்தலிற்காக நாளை 05.02.2021 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கோப்பாய் மத்தி புனித சூசையப்பர் தேவாலயத்தில் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி ஒப்புக்கொக்கப்படும். மறு நாள் 06.02.2021 சனிக்கிழமை திரு.திருமதி பொனிற்றா இளங்கோராசன் அவர்களின் உடுவில் வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள வீட்டில் ஆன்ம ஈடேற்ற பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் சமூக இடைவெளி பேணியும், சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாகவும் நடைபெறும் என்பதை தெரியப்படுத்தி நிற்கின்றோம்.

மேலும் எமது தாயார் படுக்கையில் இருந்த காலத்தில் வெளிநாட்டு, உள்நாட்டு உறவுகளில் தொலைபேசி ஊடாகவும், நேரடியாக வந்தும் அம்மாவுக்கு ஆறுதல் கதைகூறி தேற்றியவர்களுக்கும், அம்மாவின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி ஊடாகத் துயர் பகிர்ந்தோருக்கும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், பொருளாதார உதவி புரிந்தோருக்கும் மேலும் வெயில், மழை, இரவு பகல் பாராது உற்றதுணையாக இருந்து இன்றுவரை தொடர்ந்து உதவி புரிந்து வரும் நல்லுள்ளங்களுக்கும் இன்னும் என்னென்ன வழிகளில் எல்லாம் எமக்கு உதவி புரிந்தார்களோ அந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். தாயாரின் இறுதிப் பயண அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ள முடியாமல் போனவர்களும் நினைவுதின நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 08 . 08 . 1934



இறப்பு 17 . 01 . 2020

### அமரர்
### செல்லப்பா தம்பிப்பிள்ளை

நிஜமாக நீங்கள் மறைந்து ஓராண்டு ஆனதோ!
நீங்கள் இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் -ஐயா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்

**தகவல்**
**குடும்பத்தினர்**

## தடைகளைத்...

திட்டமிட்டபடி பொத்துவிலில் இருந்து தாழங்குடா வரை இந்தப் பேரணி இடம்பெற்றது. இன்று தாழங்குடாவில் இருந்து பேரணி ஆரம்பித்து மட்டக்களப்பு வாழைச்சேனை ஊடாகச் செல்லவுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்கள் உட்பட இலங்கை முழுதும் நடத்தப்படும் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் பல்சமய ஒன்றியங்கள் இணைந்து அனுப்பிவைத்துள்ள கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தக் கோரியும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்தக் கோரியும், முஸ்லிம் மக்களின் மத நம்பிக்கைகளை மதிக்கக்கோரியும் இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது.

**பொலிஸாரின் கெடுபிடி**

போராட்டம் ஆரம்பமாகும்போது கனமழை பெய்தது. எனினும் அதைப் பொருட்படுத்தாமல் அரசியல் பிரதிநிதிகளும் சமூக அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் மதத் தலைவர்களும் பேரணியை முன்னெடுத்தனர். பொலிஸார் பல இடங்களில் பேரணியை முடக்கிவிட கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டனர். பல இடங்களில் போராட்டக்காரர்களை மிரட்டும் விதமாக கைலப்பிலும் பொலிஸார் ஈடுபட எத்தனித்தனர். ஆனால் அவை அனைத்தையும் தாண்டி பேரணி முன்னெடுக்கப்பட்டது.

**போராட்டம் தொடரும்**

போராட்டத்தின்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், நீதிமன்றக் கட்டளைகளைக் கொண்டு எமது நீதிக்கான போராட்டத்தை அடக்க முடியாது எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்த நாட்டில் எத்தனையோ போராட்டங்கள், நிகழ்வுகள், ஏன் அரசின் நிகழ்வுகள் கூட கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், தமிழ் பேசும் மக்கள் தங்கள் உரிமை தொடர்பான விடயங்களுக்காகப் போராட்டம் நடத்தும்போது மாத்திரம் கொரோனாவும், நீதிமன்ற உத்தரவுகளும் வருகின்றன. இதுதான் இந்த நாட்டுத் தலைவரின் ஒரே நாடு ஒரே சட்டம்.

அரசின் இவ்வாறான பாரபட்சம் காட்டும் அடக்குமுறைக்கு எதிராகவுமே எமது போராட்டம் பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமது மக்களுக்காக எத்தடையையும் உடைப்போம். இந்தப் போராட்டத்தில் எமது மக்கள், குறிப்பாக எமது இளைஞர்கள் துணிவுடன் கலந்துகொள்ள வேண்டும். இது எமது உரிமைக்கான போராட்டம். பொலிகண்டி வரைக்கும் எமது பேரணி தொடரும்' என்றார். (ம-22)

## பேரணிக்கு...

என்று தெரிவித்த மல்லாகம் நீதிமன்றம் வழக்கை நாளை வரை ஒத்திவைத்தது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான தன்னெழுச்சிப் போராட்டம் அம்பாறையில் நேற்று ஆரம்பமானது. இந்தப் போராட்டத்துக்கு பல நீதிமன்றங்களில் பொலிஸார் தடை உத்தரவு பெற்றுள்ளனர். மல்லாகம் பொலிஸாரும் மல்லாகம் நீதிமன்றத்தில் தடை கோரி வழக்குத் தொடர்ந்தனர். இந்த நிலையில் மேற்படி பேரணியால் கொரோனாப் பெருந்தொற்றுப் பரவும் சாத்தியம் உள்ளதா? என்பது தொடர்பான அறிக்கையை வழங்குமாறு தெரிவித்த மல்லாகம் நீதிமன்றம் வழக்கை நாளைவரை தவணையிட்டது. (ம)

## தாழங்குடாவிலிருந்து...

தப் பேரணி வாழைச்சேனை, வாகரை, மூதூர், திருகோணமலை ஊடாக இன்று நண்பகல் கொக்கிளாய் பகுதிக்குள் நுழையும். பின்னர் அங்கிருந்து முல்லைத்தீவு நகரை நோக்கி இன்று மாலை செல்லும். (ம-319)

## முஸ்லிம்களும்...

னார்கள். கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இறப்பவர்களின் ஜனாஸாக்களை கோத்தாபய அரசு, அவர்களின் மத நம்பிக்கைக்கு முரணாக எரியூட்டி வரும் நிலை யில் ஜனாஸா எரிப்புக்கு எதிரான குரல்கள் இந்தப் பேரணியில் எழுந்தன. அம்பாறை மாவட்டத்தில் பெருமளவான முஸ்லிம்கள் இந்தப் பேரணிக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர். முன்னாள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (ம-30)

## இலங்கைக்கு...

கொண்டாடப்படுகின்றது. தமிழ் மக்கள் தம் உரிமைக்காகப் பேரணியை நடத்தி வரும் நிலையில் தமிழ் மொழியைப் புறக்கணித்து இந்தச் சுதந்திரதினம் கொண்டாடப்படுகின்றது.

கொழும்பு - காலிமுகத் திடலில் சுதந்திர கொண்டாடத்துக்கான ஏற்பாடுகள் கோலாகலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பௌத்தக் கொடிகளும் இலங்கைத்தேசியகொடிகளும் விழாவுக்காகக் கட்டப்பட்டுள்ளன. பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இன்று தேசிய கீதம் தனிச் சிங்களத்தில் இசைக்கப்படவுள்ளது. (ம)

## இலங்கையுடன்...

தடுப்பது மற்றும் கண்டிப்பதற்கான சர்வதேச மையம் கோரியுள்ளது.

இலங்கை உள்பட இனப்படுகொலை செய்யும் நாடுகளுடன் பிரிட்டன் அரசு வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்வதை தடுக்கும் வர்த்தக சட்டத் திருத்தங்களுக்கு பிரிட்டனின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும், பிரபுக்கள் சபை உறுப்பினர்களையும் ஆதரவளிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் ஊடக ஒருங்கிணைப்பாளரான திருமதி நிலானி கிரிஸ்டி காண்டீபன் கருத்துத் தெரிவிக்கும்போது, எமது அமைப்பு வேண்டுகோள் விடுப்பதைப்போல, ஏனைய தமிழ் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களும் பிரிட்டன் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றார். (ஒ.இ)

## வீட்டை....

பொலிஸார் கைது செய்தனர்.

இன்று காலை 7 மணியளவில் குறித்த வீட்டில் உள்ள நபர் பாடசாலைக்குப் பிள்ளையை விடச் சென்று திரும்பிய போது, வீடு உடைத்து நகைகள் திருடப்பட்டிருந்தன. அதுதொடர்பில் வீட்டின் உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். சம்பவம் தொடர்பில் தகவல்களைப் பெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான அணியினர் விசாரணைகளை முன்னெடுத்தனர். அதன்போது சந்தேகநபர், நகைகளை விற்பனைசெய்ய யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக்கடைகளில் நடமாடுகின்றார் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து அங்குசென்ற பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்தனர். சந்தேக நபரிடமிருந்து 41 தங்க நகைகளும், 2 கிராம் 50 மில்லிக்கிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டன. யாழ்ப்பாணம் பொம்மைவெளியைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டவராவார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26)

## நான்கு...

ணப்பங்களுக்கு அமைய யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான அகிம்சை வழிப்போராட்டம் நேற்றுக் காலை கிழக்கில் ஆரம்பமாகி வடக்கு நோக்கி வந்து கொண்டிருக்கும் நிலையில் பொலிஸார் தடை உத்தரவு பெற்றுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சட்டத்தரணி க.சுகாஷ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வேலன் சுவாமிகள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரநிதிகள் ஆகியோருக்கு எதிராக இந்தத் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு இடையூறை ஏற்படுத்தல், கொரோனா சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்பட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன. ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் நாட்டுக்குக் களங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸார் நீதிமன்றில் குறிப்பிட்டனர்.

**சாவகச்சேரி**

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியைத் தடை செய்யக்கோரி சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸாரால் க.பிரபாகரன், திருமதி சசிகலா ரவிராஜ், அ.பாலமயூரன், க.அருந்தவபாலன் ஆகியோருக்கு எதிராகவும், கொடிகாமம் பொலிஸாரால் செ.மயூரன், சி.பிரபாகரன், ஞா.கிஷோர் ஆகியோருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்களை நாளை 5ஆம் திகதி நீதிமன்றில் முற்படுமாறு நீதிமன்றம் அறிவித்தது.

**முல்லைத்தீவு**

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தைத் தடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்திய முல்லைத்தீவு பொலிஸார் மேற்படி தடை உத்தரவையும் பெற்றுள்ளனர். நேற்று முதல் நாளைமறுதினம் 6ஆம் திகதி வரையும் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 9 பேருக்கும், முல்லைத்தீவைச் சேர்ந்த 10 பேருக்கும், முள்ளியவளையைச் சேர்ந்த 10 பேருக்கும் எதிராகவே இந்தத் தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது. (ம-19)

## எல்லை மீறிவிட்டார்...

ஹெல உறுமய கட்சியின் தலைவரும், அமைச்சருமான உதய கம்மன்பில இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பான எமது பதில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைத் தற்போது கூறமுடியாது. ஏனெனில், வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன காணொலி மூலமாக மாநாட்டில் உரையாற்றுவார். அதன்போதே உள்ளடக்கங்கள் குறித்து அறிவிக்கப்படும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1, 40/1 தீர்மானங்கள் மூலம் வழங்கப்பட்ட விடயதானங்களுக்கு அப்பால்சென்றே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், குறித்த அறிக்கையைத் தயாரித்துள்ளார். பதினேழரை (17.5) பக்கங்களைக்கொண்ட குறித்த அறிக்கையில் இரண்டரை பக்கங்கள் மாத்திரமே விடயப்பரப்பு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது. எஞ்சியவை விடயப்பரப்பை மீறியவையாகவே உள்ளன.

அறிக்கை ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய சாட்சியங்கள் இல்லை. மூலங்களைக் குறிப்பிடவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தவறியுள்ளார். இந்த இரண்டு காரணங்களையும் அடிப்படையாகக்கொண்டு மேற்படி அறிக்கையை நிராகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனைய விடயங்கள் வெளிவிவகார அமைச்சரின் உரையின்போது உரிய வகையில் அறிவிக்கப்படும். என்றார். (த-44)

## சுகாதார...

விபத்தில் சுகாதாரப் பணியாளர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிலங்குளம்- பள்ளமடு பிரதான வீதியூடாக வந்த கனரக வாகனமும், அடம்பனிலிருந்து மன்னார் வீதியூடாகப் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதியதில் விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவரான, அடம்பன் பகுதியைச் சேர்ந்த ரி.எம். சல்மான் (வயது29) என்பவரே உயிரிழந்தார். இவர் அடம்பன் பிரதேச மருத்துவமனையில் பணிபுரிகின்றார். விபத்தில் படுகாயமடைந்த அவர் அடம்பன் பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த அடம்பன் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். விபத்துக்குள்ளான குறித்த வாகனத்தின் சாரதியையும் கைதுசெய்தனர். மருத்துவமனையில் கடைமை முடித்து வீடு நோக்கிச் செல்லும்போதே குறித்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (த-56)

## இளம் குடும்பப்....

கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஒரு பிள்ளையின் தாயான டினோஜன் பிரிந்தா (வயது 23) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-10)

# தமிழக மீனவர்கள் நால்வர் கொலை; எம்மால் ஏற்றுக்கொள்ளவே முடியாது

## இலங்கை மீது இந்தியா பாய்ச்சல்

புதுடெல்லி, பெப்ரவரி 4
இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் நால்வர் கொலை செய்யப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார். தமிழக மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று நடைபெற்ற ராஜ்யசபா அமர்வின்போது தி.மு.க மற்றும் அ.தி.மு.க கட்சி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர், 'தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டதற்கு இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் கொலை செய்யப்பட்டது ஏற்க முடியாத நடவடிக்கை என்றும் சுட்டிக் காட்டியுள்ளோம்' என்றார்.



இதேவேளை, கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் அடிக்கடி தாக்கப்படுவதால் மீன்பிடித் தொழிலையே விட்டுவிடும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தி.மு.க எம்.பி திருச்சி சிவா குறிப்பிட்டார்.
அதேபோல் அ.தி.மு.க எம்.பி. தம்பித்துரை, 'தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல் குறித்து இந்திய மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்களைத் தாக்குவது இலங்கை இராணுவத்தின் வழக்கமான நடவடிக்கையாக இருந்து வருகின்றது' என்று குற்றஞ்சாட்டினார். (ம-22)

# லகிரு திரிமன்னேக்கு கொரோனாத் தொற்று



கொழும்பு, பெப். 4
இலங்கைக் கிரிக்கெட் அணிக்குள் கொரோனாப் பெருந்தொற்று ஊடுருவியுள்ளது. இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் மற்றும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திரிமன்னே ஆகிய இருவரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இதையடுத்து அவர்கள் இருவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புளைப் பேணியவர்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்படுகின்றன. மிக்கி ஆர்தரும் தொற்றுக்கு உட்பட்டுள்ளதால் இலங்கை அணியின் வேறு சில வீரர்களுக்கும் தொற்று ஏற்படலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

# நேற்றும் 711 தொற்று

கொழும்பு, பெப். 4
இலங்கையில் நேற்றும் 711 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 66 ஆயிரத்து 409ஆக அதிகரித்துள்ளது. தொற்றாளர்களில் 59 ஆயிரத்து 883 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 196 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-22)

## கிழக்கு முனைய விவகாரம்;

# ஜனாதிபதி, பிரதமருடன் கோபால் பாக்லே பேச்சு




கொழும்பு, பெப். 4
இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை அவசர அவசரமாக சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.
கேந்திர முக்கியத்துவமிக்க கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குக் கொடுக்க மாட்டோம் என்று அரச தரப்புக் கூறிவரும் நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. கிழக்கு முனையத்தை அபிவிருத்திசெய்வது தொடர்பாக 2019ஆம் ஆண்டு மே மாதம் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை இலங்கை கட்டாயமாக மதித்துச் செயற்படவேண்டும் என்பதை இந்தச் சந்திப்பில் இந்தியத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.
இதேவேளை, கிழக்கு முனையம் தொடர்பில் எடுத்துள்ள தீர்மானம் குறித்து இதுவரை இந்தியாவுக்கு அறிவிக்கவில்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-ப)

## பதவி வெற்றிடம்

யாழ் நகரின் பிரபல்யமான உணவு விடுதி ஒன்றிற்கு இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் A/C திருத்துனர் ஒருவர் உடனடியாகத் தேவை. ஆர்வமுள்ளவர்கள் கீழ்உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

Contact:077 470 5759, 021 7200 707

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### மட்டுவிலில்...

நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்று மட்டுவில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்ட நிலையில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-9)

### ஐ.நா. ஆணையாளருக்கு...

மதச் சுதந்திரம் குறித்த அறிக்கையாளர் அகமது ஷாஹீத் மற்றும் கலாசார உரிமைகள் குறித்த சிறப்பு அறிக்கையாளர் கரிமா பென்னவுன் ஆகியோருக்கே கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
வடக்கு மற்றும் கிழக்கு சிவில் சமூகம் இந்தக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.
அந்தக் கடிதத்தில் பின்வரும் விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.
இந்து ஆலயங்களை அழித்த பின்னர் விகாரைகளை நிறுவுவதன் மூலம் தமிழ்ப் பகுதிகளில் நில அபகரிப்பு மற்றும் தமிழின பாரம்பரிய, வரலாற்று இடங்களை சிங்களப் பகுதிகளாக அரசு மாற்றி வருகின்றது. கொரோனா காரணமாக உயிரிழந்த முஸ்லிம்க ளின் விருப்பத்துக்கு எதிராகவும், இஸ்லாமிய போதனைகளுக்கு எதிராகவும் அவர்களது உடல்கள் தகனம் செய்யப்படுகின்றன.
மலையகத்தில் தமிழர்கள் அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவுக்கு நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளுக்கு அரசு பதிலளிக்கவில்லை.
போர் முடிவடைந்ததிலிருந்து, தமிழ்ப் பகுதிகளின் இராணுவமயமாக்கல் தொடர்கின்றது.
கால்நடை உரிமையாளர்களாக இருக்கும் தமிழர்கள் ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவர்கள் வசிக்கும் பகுதிகள் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன.
தமிழ் இளைஞர்களை குற்றச்சாட்டு அல்லது விசாரணையின்றி சிறையில் அடைக்க பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது.
தமிழ் அரசியல் கைதிகள் பல ஆண்டுகளாக விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிங்களவர்களுக்கு அரசு மன்னிப்பு வழங்கியுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தங்களது அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிக்கக் கோரி வருகின்றன. ஆனால் அரசு அவர்களுக்குப் பதில் அளிக்க மறுக்கிறது.
தமிழர்கள் போரின்போது கொல்லப்பட்ட தங்கள் உறவுகளை நினைவுகூரும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இது நினைவேந்தல்களை மறுப்பதன் மூலமும், இறந்தவர்களின் கல்லறைகளை அழிப்பதன் மூலமும், நினைவுச் சின்னங்களை இடிப்பதன் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளன.
இந்த முறைகேடுகளை வெளிக்கொண்டுவரும் தமிழ் ஊடகவியலாளர்களையும், தமிழ் சமூக ஆர்வலர்களையும் அரசு குறிவைக்கின்றது என்றுள்ளது. (ஒ.இ)

## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கின்றன.

- வரவேற்பாளர் (Receptionist) பகல், இரவு
- ஒப்பு நோக்குநர் (Proof Reader) இரவு
- விளம்பர வடிவமைப்பாளர் (Graphic Designer) இரவு

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் எதிர்வரும் (06.02.2021) சனிக்கிழமை காலை 09.00-12.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம்தரவும்.
முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

உதயன்

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.